"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சித்திரை - வைகாசி - ஆனி 2011



கர வருடப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


Veena's @ barkingside
Indian Shopping made easy
English & Tropical food
Fresh Vegetables
Frozen foods
Wide range of Asian Foods
NEWLY OPENED
Wide range of products
Many more offers in store
Veena's
Veena's
77-79, High Street, Barkingside, Essex IG6 2AF
Tel: 0208 550 2700
www.veenas.com

மணி 19

# கலசம்
# KALASAM

ஒலி 69

www.saivamunnettasangam.com

FREE ISSUE

## கற்கவேண்டிய பாடம்

அண்மையில் யப்பானிலே பூகம்பத்தாலும் சுநாமியாலும் பல உயிர்கள் அழிந்தன. பல குடிமனைகள், அலுவலகங்கள், போக்குவரத்து நிலையங்கள் தரைமட்டமாயின. நாட்டின் நூற்று நாற்பது வருட சரித்திரத்தில் இதுதான் பெரிய பூகம்பம் என்று புவியியல் விஞ்ஞானிகள் கூறினார்கள். பெருந்தொகையான மக்கள் மடிந்துவிட்டார்கள். பல குடும்பங்கள் தம் உடைமை களை இழந்து நிற்கின்றன. அதற்கும்மேல் அணுமின் நிலையங்களிலே குளிராக்கும் கருவிகள் பாதிப்படைந்து இயங்காமல் கதிரியக்க அலைகள் வெளியேறுவதாகவும் வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். நடந்தது ஒரு பெரிய அழிவு.

பொதுவாக ஒரு நாட்டிலே இந்த அளவில் அழிவு ஏற்படும்போது மக்கள் தத்தளிப்பதையும் துயருறுவதையும் காணலாம். அது சகஜம். ஆனால், பல நாடுகளில் இறந்தவர் உடம்பிலிருந்த நகை, பொருள்களைத் திருடுவது, நிவாரணப் பொருள்கள் வழங்கும்போது முண்டியடித்து சண்டை போடுவது, கடைகளை உடைத்துப் பொருள்களைத் திருடுவது என்று பலவிதமான அருவருப்பூட்டும் காட்சிகளையும் நாம் தொலைக்காட்சி செய்திகளிலே காண முடியும். ஆசிய, ஆபிரிக்கநாடுகளிலும் மேற்கு நாடுகளிலும் இக்காட்சிகளை நாம் பலமுறை பார்த்திருக்கிறோம்.

யப்பானில் இதற்கு நேர்மாறாக, மக்கள் ஒழுங்காக வரிசையில் நின்று தமது நிவாரணங்களைப் பெறுவதும், மற்றவர்களுக்கு உதவுவதும், பிறர் பொருள்களைத் திருடாது செல்வதும் போன்ற காட்சிகளே நமக்குத் தெரிந்தன. அதற்கு மேல், **தன் கடை அழிந்துவிட்டபோதும் தன் ஊர் மக்களுக்கு உதவவேண்டும் என்ற முனைப்பில் ஒரு கடைக்காரர் தாம் மீட்ட பொருள்களை, அழிவுக்கு முன் என்ன விலையில் விற்றாரோ அதே விலையில் தொடர்ந்தும் விற்றதாகவும்** ஒரு செய்தி வந்தது. பொருள்கள் தீர்ந்தபின் தன்னுடைய ஊர்மக்கள் பட்டினி இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில், அவர் வெளியே சென்று மேலதிக பொருள்களை வாங்கி வந்து விற்றபோது நொடிப்பொழுதில் முழுவதும் விற்பயையாகிவிட்டதாம். அவரின் தன்னலமற்ற இச் செயலை எப்படிப் பாராட்டுவது என்று தெரியவில்லை.

***இங்கே மேற்கு நாடுகளிலே அழிவு இல்லை; அடுத்த நேர உணவுக்குப் பஞ்சமில்லை. ஓரளவு சட்ட ஒழுங்குகள் உள்ளன. திருடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், சைவக் கோயில்களிலே பிரசாதம் பெறுவதிலேயே பிரசினை. இடிபட்டு, வயதானவர் - முதியவர் என்ற வித்தியாசம் இன்றி வரிசை ஒழுங்கின்றி மக்கள் அல்லற்படுவதை அன்றாடம் பார்க்கிறோம். உதவிப்பணம் பெறுவதில் மோசடி, கடன் அட்டை மோசடி, திருட்டு என்று நம் இனத்திடை குற்றங்கள் அதிகமாகிக்கொண்டே போகின்றன.***

போதும் என்ற மனம் நமக்கில்லை. கிரிசாம்பாளின் கதை ஏட்டளவில் மட்டுந்தான். தமிழிலேதான் பல நீதி நூல்கள் இருக்கின்றன. அவையும் இன்று பொருளற்றவை ஆகிவிட்டனவோ என்று எண்ணவைக்கும் அளவுக்கு அக்கிரமமும் அநியாயமும் போட்டிபோட்டுத் தலைவிரித்து ஆடுகின்றன. நம் இளைய சந்ததிக்கு நாம் புகட்டும் பாடம் இதுதானா?

யப்பானியர்களை பார்த்தாவது **நல்லதைக் கற்போம். நல்லதைச் செய்வோம்.**

க.ஜெகதீசுவரன் **ஆசிரியர்**

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர்
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்

சூரபன்மனின் பெருவாழ்வு - கந்தபுராண சிந்தனைகள் 03

முத்தியடைந்த மங்கல நிகழ்ச்சி - நாவுக்கரசர் அற்புதங்கள் 05

எனக்குப் பிடித்த பத்து 09

சோமாசிமாற நாயனார் - பெரியபுராணத்தொடர் 12

சைவமும் வைணவமும் 14

கீரிமலை - நகுலேஸ்வரம் பெருஞ்சாந்தி விழா 18

ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் 19

யாவையுமாய் அல்லையுமாம் 22

ஆலய வழிபாடும் வேதாகம நெறியும் 26

துறவிக்கு உயர்வேது? தாழ்வேது? 30

இமயம் - பயணக்கட்டுரை 33

வேதாகமங்கள் வாழ்க! சைவசமயம் வாழ்க! 37

கண்ணனும் தாத்தாவும் 39

Hinduism in search of Answers 43

திருக்குறள் கற்போம் 47

**அட்டைப்படம்: திருநெல்வாயில் - படம்: ஞாலக்கோன்**

# சூரபன்மனின் உணர்வுபூர்வமான பெருவாழ்வு

## கந்தபுராணச் சிந்தனைகள்

சிந்திப்பவர் - முனைவர் சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

பெருவாழ்வு ஒருவன் வாழ்ந்திருக்கிறான் என்றால், அவனுக்குக் கஷ்டம் வரும் நேரத்திலே, அவனால் நன்மைபெற்றோர் எல்லோரும் உதவி செய்வதற்குக் காத்திருக்கவேண்டும்; துன்பம் அடையவேண்டும்; உயிரைக் கொடுக்கவேண்டும். ஒருவனுக்கு இவ்வாறு பலரும் உதவ முன்வருகிறார்கள்; உயிரைக் கொடுக்கிறார்கள் என்றால் அவன் ஒரு பெருவாழ்வு வாழ்ந்திருக்கவேண்டும். இனிச் சூரனின் வாழ்வைப் பார்ப்போம். சூரன் செய்த தவத்தின் வலிமையினாலே பிள்ளைகளின் பலம் பெரிதாக இருந்தது. தம்பிமார்களின் ஆற்றல் மிகவும் அதிகமாயிற்று. அசுரகுலத்தோர் எல்லோரும் செல்வமும் ஆற்றலும் பெற்று இன்பவாழ்வை அநுபவித்தார்கள். சூரன் செய்த தவத்தின் வலுவினால் அவுணர்கள் பெற்ற செல்வத்தைச் சொல் அளவிலே கேட்டுணர்ந்தாலும், முனிவர்கள்கூட அசுரர் ஆவதற்குத் தவம் செய்வர் என்றால் மற்றவர்களைப்பற்றி சொல்லவா வேண்டும்? ‘உலகத்தின் மிக்க வளம்கொண்ட இந்த நகரத்தைப் பெருந் தவம் செய்தவரே காண்பர்’ என்று மிக்க வளம் கொண்ட மகேந்திரபுரியைப் பார்த்த வீரவாகுதேவர் சொல்கிறார்.

தொடர்ந்த வீரவாகுதேவர் ‘நரம்புகள் மேலே எழுந்து தெரிய, தசையெல்லாம் வற்றி உலர்ந்து நரைத்துக் கோலூன்றி, முதிர்ந்து தளர்ந்தவரையும், கூற்றுவனால் அழைத்துச் செல்லப்படுபவரையும், வறுமையால் வாட்டம் அடைபவரையும் யாம் காணவில்லை. இது உண்மையில் தவத்தின் வலிமையே’ என்று சொல்கிறார். இவ்வாறாகப் **பழமரம் உள்ளூர்ப் பழுத்தாற்போல் சூரன் தன்னைச் சார்ந்த எல்லோருக்கும் உதவியிருக்கவேண்டும்.** செல்வம் சேர்ந்த வலிமையுடைய ஒருவன் எவ்வாறு சுற்றத்தவரைப் பேணவேண்டும் என்பதைச் சூரனுடைய பெருவாழ்வின் மூலம் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது. தேவரைத் துன்புறுத்திச் சிறையிட்டதைத் தவிர, பல விதங்களில் அவன் பெருவாழ்வுதான் வாழ்ந்திருக்கவேண்டும். உதாரணத்துக்குச் சில:

சூரன் தன்னுடைய மனைவியான பதுமகோமளையிடம் அளவுகடந்த அன்பும் ஆதரவும் கொண்டவனாக இருந்திருக்கவேண்டும். இவ்வளவுக்கும் அவன் ஒருதாரக்காரன் அல்ல. தேவர், அசுரர், சித்தர், கின்னரர், இயக்கர், நாகர் முதலியவர்களின் பெண்கள் எண்ணிலாதவரை அவன் மணந்ததாகக் கந்தபுராணம் சொல்கிறது. ஆனாலும் பதுமகோமளைக்கு அவன் ஒரு சிறந்த கணவனாக இருந்திருக்கவேண்டும். அல்லாவிட்டால், சூரன் இறந்துவிட்டான் என்ற சொல் கேட்டவுடன் அவள் தன்னுயிரை விட்டிருக்க முடியாது.

**காவல் மன்னவன் இறந்தனன் எனுமுரை கன்னத்துள்**
**மேவும் எல்லையில் அசனியே றுண்டவெம் பணியேபோல்**
**தேவி யாகிய பதுமகோ மளையெனுந் திருமங்கை**
**ஆவி நீங்கினள் தலையளி ஆகிய ததுவன்றோ**

**இரணியன் புலம்புறு படலம் 2**

சூரனுடைய பிள்ளைகள், தம்பி சிங்கமுகாசுரன், அமைச்சர் தருமகோபன் எல்லோரும் இறந்துவிட்டார்கள். ஆறுநாட் போரிலே படுதோல்வி கண்டது அசுரப்படை. இந்த நிலையிலே ஏழாம் நாள் சூரன் போருக்குப் புறப்படுகிறான். அவுணரின் மன்னன் பெரிய பொன் தேரிலே

மகேந்திர நகரின் முதற்கடை வாயிலிற் செல்லவும், அவனுடைய வருகைக்காசச் சூழ்ந்து நின்ற படைகளெல்லாம் வானத்திலுள்ள விண்மீன்கள் உதிரும்வண்ணம் ஆரவாரம் செய்தனர்.

**தானவர் கோமகன் தடம்பொற் றேரொடு**
**மாநகர் முதற்கடை வாயில் போதலும்**
**ஆனது நோக்கியே அங்கட் சூழ்தரு**
**சேனைகள் ஆர்த்தன உடுக்கள் சிந்தவே**

**சூரபன்மன் வதைப்படலம் 30**

இவ்வாறு ஆரவாரம் செய்வதற்கு அவன் ஒரு சிறந்த தலைவனாக இருந்திருக்கவேண்டும். முருகப்பெருமானோடு யுத்தத்துக்குப் புறப்படத் தயாராகிறான் சூரன். அவனுடைய அணிகலனில் முதலாவதாக வருகிறது திருநீறு. அவனைவிடச் சிறந்த சைவன் இருக்கமுடியுமா?

**நீற ணிந்தனன் நெற்றிமெய்ந் நிறைவிரை களபச்**
**சேற ணிந்தனன் பூந்தொடை பங்கியிற் செறித்தான்......**

**சூரபன்மன் வதைப்படலம் 17**

தம்பியாகிய சிங்கமுகாசுரன் யுத்தத்துக்குப் புறப்படுகின்றான். அவன் நீதியையும் முருகப்பெருமானின் ஆற்றலையும் உணர்ந்தவன். ‘முருகனென்ற ஒருவனை நான் வென்றுவிட்டால் இங்கே வந்து உன்னைக் காண்பேன். அவ்வாறு வெல்லாதுபோனால் எல்லோரும் அழிவர் என்பது நிச்சயம். அப்போது நீ உன் மனத்துக்குத் தோன்றியவாறு செய்வாயாக’ என்று அவன் சொல்கிறான்.

**கந்தனாம் ஒருவனைக் கடக்கப் பெற்றிடின்**
**வந்துனைக் காண்பனால் மற்ற தில்லையேல்**
**அந்தம தடைவரால் ஆரும் ஐயநீ**
**புந்தியின் நினைந்தன புரிதி யாலென்றான்**

**சிங்கமுகாசுரன் வதைப்படலம் 25**

தன்னுடைய உயிரை அண்ணனுக்காகக் கொடுக்கத் தயாராகி விடைபெறுகின்றான். இதைப் பெற்ற சூரனின் தலைமையைவிடச் சிறந்த தலைமை வேறெங்கு இருக்கமுடியும்?

யுத்த களத்திலே எல்லோரும் இறந்துவிட, தமியனாகி நிற்கிறான் சூரன். மாயையை அழைத்து அவளின் யுக்தியினால் இறந்தவர்கள் அனைவரையும் உயிர்பெற்று எழச்செய்கிறான் சூரன். உயிர் பெற்றவர்கள் முருகப்பெருமானாலும் அவருடைய சேனைகளாலும் முன்னர் கொல்லப்பட்டவர்கள். எனவே உயிர் கிடைத்ததும் தப்பியோட முயன்றிருக்கவேண்டும். ஆனால் சூரனிடம் கொண்ட பேரன்பினால் மீண்டும் போராட முன்வருகிறார்கள். ‘எம்முடைய அரசே! நீங்கள் இங்கே நில்லுங்கள். நாங்கள் அனைவரும் போய் அந்தச் சிறுவனோடு அவனுடைய படை வீரரான எல்லோரையும் அழித்துவிட்டு வந்து உன் அடிகளை வணங்குவோம்’ என்று கூறினார்கள்.

**எந்தை நீயிவண் நிற்குதி யாமெலாம் ஏகிக்**
**கந்த வேளுடன் அவன்படை வீரரைக் கடிந்து**
**சிந்த ராகிய பூதர்தந் தொகையையுஞ் செகுத்து**
**வந்து நின்னடி வணங்குதும் வல்விரைந் தென்றார்**


**சூரபன்மன் வதைப்படலம் 322**

இவ்வாறு ‘சார்ந்தோர் முழுப்பேரும் போற்றிக் கொண்டாடும்படி பெருவாழ்வு வாழ்ந்த சூரனின் வாழ்க்கையில் நாம் கற்பதற்கு எவ்வளவோ இருக்கின்றன’ என்பதையே கந்தபுராணம் காட்டும் சைவக் கலாசாரம் சொல்லா நிற்கின்றது.

****

# முத்தியடைந்த மங்கல நிகழ்ச்சி

இடைக்காடு சயம்பு (இலண்டன்)



திருநாவுக்கரசு நாயனார் பாண்டிய நாட்டு யாத்திரையை முடித்துக்கொண்டு சோழநாடு திரும்பினார். ஏதோ ஒரு உள்ளுணர்வுடன் திருப்புகலூரைக் குறிவைத்து, வழியில் எதிர்ப்படும் தலங்களைத் தரிசித்து வணங்கிக் கொண்டு திருப்புகலூர் வந்தணைந்தார். (புகலூர்-புகல்-தஞ்சம், சரண். புகலூர்-பிறவிக்கு அஞ்சிய உயிர்கள் புகலடையத் தக்கதாகிய தலம்)

**பொய்கைசூழ் பூம்புகலூர்ப் புனிதர்மலர்த் தாள்வணங்கி**
**நையுமனப் பிரிவினொடு நாடோறுந் திருமுன்றிற்**
**கைகலந்த திருத்தொண்டு செய்துபெருங் காதலுடன்**
**வைகுநாள் எண்ணிறந்த வண்டமிழ்மா லைகள்மொழிவார்.**

நாள்தோறும் இறைவரை வணங்கிப் பல வண்தமிழ் மாலைகள் தொடுத்தும், உழவாரக் கைத்தொண்டு செய்தும் பத்திமயமாய் இருந்தார். அவர் திருப்புகலூரில் பாடிய பதிகங்களில் இப்போ கிடைத்தவை இருபது ஆகும். இவற்றுள் தேவலோகப் பெண்களை நோக்கிப் பாடிய பதிகமும் முத்தியடையும் போது பாடிய பதிகமும் அடங்கும்.

இப்பதிகங்களெல்லாம் வேதங்களின் பொருளும்-குறிப்பாகத் திருவுருத்திரமும், சைவசித்தாந்த சாத்திர உண்மைகளும் செறிந்தவையாகும். எல்லாப் பதிகங்களும் இலக்கியச் சுவையுடன் பத்திச் சுவையுஞ் சேர்த்துப் பாராயணம் பண்ண வேண்டியவையாகும். இப் பதிகங்கள் ஒவ்வொன்றுக்கும் கட்டுரைகள் எழுதலாம். அப்படிப் பொருள் பொதிந்த பாடல்கள் கொண்டவையாகும். மேலும் அப்பாடல்களில் தாம் சமணஞ்சார்ந்த குற்றத்துக்குக் கழிவிரக்கமும், இறைவர் தம்மை ஆட்கொண்ட அதிசயமும், எமது குற்றங்ளையும் தம்மேலேற்றிப்பாடி எம்மை அறிவுறுத்திய முறையும் அகப்பூசை செய்த சான்றுகளும் காண்கிறோம். அதனால் தான் சேக்கிழார் “வண்டமிழ் மாலைகள் மொழிவார்” என்றார்.

நாயனார் இந்த நேரம் இருவினை ஒப்பு, மலபரிபாகம் என்ற நிலையில் இருந்தார். ஞானம் முற்றிய நிலை--இன்ப துன்பம் இவற்றை உணராத, பாதிக்கப்படாத நிலை, விருப்பு வெறுப்பு அற்ற நிலை-முத்திக்கு முந்திய நிலை- இந்த முதிர்ச்சி நிலையில் இருந்தார். இறைவர் ஒரு திருவிளையாடல் செய்தார். நாயனார் வீதியில் உழவாரத்

தொண்டு செய்யும் போது, "....... உழவாரம் நுழைந்த இடந்தானெங்கும், பொன்னினொடு நவமணிகள் பொலிந்திலங்க அருள் செய்தார்". நாயனாருக்கு அவையெல்லாம் ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. வழமைபோல் புல் பூண்டு பருக்கைக் கற்கள் போல், இப்போ வெளிப்பட்ட மாணிக்கம், இரத்தினம், முத்து வகைகளையும் உழவாரத்திலேந்திக் குளத்திலெறிந்து கொண்டிருந்தார்.

இறைவரோ நாயனாரை மேலும் சோதனை போட்டுப் புடம் பண்ணுகிறார். நாயனாரின் தூய்மையைச் சோதிக்க "வில்லோடு நுதன் மடவார் விசும்பூடு வந்திழிந்தார்". தேவலோகப் பெண்களை நாயனார் முன் இறக்கினார் இறைவர். அவர்கள் பாடினர்; ஆடினர். நாயனாரைச் சுற்றி விகாரமான அபிநயங்களுடன் நடனம் ஆடினார்கள். கண்ணால் மயக்கிக் கைகளாலழைத்துப் பாடினர்; ஆடினர். நாயனாரோ இவற்றை ஒரு சிறிதும் கவனிக்கவில்லை. உழவாரத் தொண்டிலேயே கருத்தாயிருந்தார். உழவாரம் பழங்காப்பு வேலை செய்து கொண்டிருந்தது. நாயனாரின் சிந்தையில் எல்லாம் திருவைந்தெழுத்தே இருந்தது. நாயனாரைப் பெண்களால் அசைக்க முடியவில்லை. ஆகையால் தமது விளையாட்டுகளைத் தீவிரப்படுத்தினார்கள்.

**ஆடுவார் பாடுவார் அல்மாரி மேற்பொழிவார்**
**கூடுவார் போன்றணைவார் குழலவிழ இடைநுடங்க**
**ஓடுவார் மாரவேள் உடன்மீள்வர் ஒளிபெருக**
**நீடுவார் துகிலசைய நிற்பாரும் ஆயினார்.**

காமத்தை ஊட்டும் யுக்திகளெல்லாம் செய்தார்கள், கட்டித் தழுவுதல் போலவும், உடைகளை நெகிழ விட்டும், உடைகள் அவிழ்ந்து காற்றில் அசையவும் நின்றார்கள்.

**இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமுஞ் செயல்புரிய**
**அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகு**
**மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தஞ்**
**சித்தநிலை திரியாது செய்பணிகள் தலைநின்றார்.**

**இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமைநோக்கி**
**"உம்மாலிங் கென்னகுறை உடையேன் யான்? திருவாரூர்**
**அம்மானுக் காளானேன் அலையேன்மின் நீரென்று**
**பொய்மாயப் பெருங்கடலுள்" எனுந் திருத்தாண் டகம்புகன்றார்.**

மனம் வாக்குச் செயல்களால் இறைவரையே கூடி நிற்பவர் இந்தப் பெண்களுடைய சேட்டைகள் வலுவடையவும் சிறிது உணர்ந்து "நான் திருவாரூர் இறைவருக்கு அடியவன். நீவிர் இந்திரனுயைட ஏவலாளர். இந்திரன் முதலிய பெருந்தேவர் இறைவரைக் காணும் பொருட்டு தேவாசிரியனில் காத்திருப்பர். (தேவாசிரியன்-திருவாரூர்க் கோயில் முன்றலில் உள்ள மண்டபம்) அடியவர்களாகிய நாமோ நேரே இறைவரிடம் போகிறவர்கள். இவற்றை அறிந்தும் நீவிர் ஏன் அலைகிறீர்? நீவிர் இருவினைகளின் உருவங்கள். நான் திருவாரூராரின் பாதங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறேன். தவறமாட்டேன். இன்னுஞ் சில நாள்களில் அடைந்து விடுவேன். உம்மால் எனக்குச் செய்யக்கூடிய தீங்கு ஒன்றுமில்லை. அலையவேண்டாம். போய்விடுவீர்" என்று கூறினார். நாயனார் எந்த உருவத்தையும் எச்செயலையும் இருவினைகளாகவே கண்டார். சாதக பாதகங்களை உணரவில்லை. முற்றிய ஞானம். நாயனாருக்கு அப்போது எண்பத்தொன்று! இப்பதிகத்தின் ஆறாவது பாடலைப் பார்ப்போம். எதிரெதிரான குணங்களை ஒன்று போலவே நோக்கி ஏசுகிறார். அப் பெண்களைப் பார்த்துக் கூறியவையெல்லாம் உலகோராகிய எமக்கே அறிவுரையாகக் கூறப்பட்டவை என்பதை உணர்வோமாக.

**பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்**
**குரோதமே உலோபமே பொறையே நீங்கள்**
**உங்கள்பெரு மானிலத்தின் எல்லை எல்லாம்**
**உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யானேல்**
**அங்கமலத் தயனொடுமா லாகி மற்றும்**
**அதற்கப்பால் ஒன்றாகி அறிய ஒண்ணாச்**
**செங்கைத் தனிக்குன்றைச் சிவனை ஆரூர்ச்**
**செல்வனைச்சேர் வேனும்மாற் செலுத்து ணேனே.**

உழவாரம் தன் வேலையைச் செய்யவும் திருவாய் திருப்பாடல்களை ஓதவும் நாயனார் கலங்காதிருந்தார். அரம்பையர்கள் இப்போது மிகவும் கிட்ட வந்து நின்றும் சேட்டைகள் செய்து பார்த்தார்கள் அவர்கள் எதிர்பார்த்த பயனொன்றுங் கிட்டவில்லை. ஆனபடியால் அவர்கள் நாயனாரை வணங்கி அகன்று மறைந்தார்கள். இந்தச் சோதனைகளைக் கொண்டு நாயனாரும் இறைவரை அடையும் நாள் விரைவில் கிட்டும் என உணர்ந்தார். அதுவரை அங்கு அமைதியாய் அமர்ந்திருந்தார். அந்தக் கருத்தில் பாடிய திருவிருத்தப்பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

**தன்னைச் சரணென்று தாளடைந் தேன்தன் னடியடைய**
**புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ!**
**என்னைப் பிறப்பறுத் தென்வினைக் கட்டறுத் தேழ்நரகத்**
**தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே**

இப்பாடல் அங்கிருந்த அடியவர்கள் தொண்டர்களை விழித்துப் பாடிய பாடல். நாயனார், இனி விரைவாக இறைவர் முத்தி அளிப்பார் என்று திடமாகத் தெளிவாக உணர்ந்தார். மற்றவர்களும் உணர்ந்தார்கள். சில நாள்கள் செல்ல, நாயனார் நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்தார். முத்தி விண்ணப்பஞ் செய்து பாடினார். பின்வருமாறு அது அவர் பாடிய கடைசித்திருப்பதிகம். முதலாவது பாடல்:-

**எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ**
**எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லாற்**
**கண்ணிலேன் மற்றோர் களைக்கண் இல்லேன்**
**கழலடியே கைதொழுது காணின் அல்லால்**
**ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்**
**ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்**
**புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணியனே.**

இப்படிப் பாடிப்பாடி முத்தியடைந்தார். நாயனார் உலகைவிட்டு உடலைக் கைவிட்டு இறைவரைச் சேருகிறேன் என்ற தெளிவான அறிவுடனேயே பத்துப்பாடல்களும் பாடிப்பாடி அமைவுற்றார். இந்தக் கடைசி நேரத்தைச் சேக்கிழார் இப்படி அறிவிக்கிறார்.

**“புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று**
**நண்ணிரிய சிவானந்த ஞானவடிவேயாகி**
**அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவர சமர்ந்திருந்தார்”**

“சிவானந்த ஞான வடிவேயாகி” என்றார். இறைவர் ஞானவடிவு, அருள் வடிவு சச்சிதானந்தம். அந்த வடிவமாகி நாயனாரும் அகண்ட ஞான வடிவுடன் கலந்து கொண்டார். ஐம்பூதங்களாகிய உடல் அண்டத்திலுள்ள ஐம்பூதங்களுடன் கலந்து விடும் கருப்பூரம் எரிந்து உருமாறுவது போல் மூலப்பொருள்களுடனே சேர்ந்துவிடும். காரைக்காலம்மையார், மாணிக்கவாசகர், திருநாளைப் போவார் நாயனார் ஆகியோரும் முத்தியடைந்த விதம் இப்படியே யாகும்.
புராணம்:-

**வானவர்கண் மலர்மாரி மண்ணிறைய விண்ணுலகின்**
**மேனிறைந்த ஐந்துபே ரியவொலியும் விரிஞ்சன் முதல்**
**யோனிகளா யினவெல்லாம் உண்ணிறைந்த பெருமகிழ்ச்சி**
**தானிறைந்த சித்திரையிற் சதயமாந் திருநாளில்”**

நாயனார் இறைவருடன் கலந்ததும் தேவச் சாதியார் கண்டார்கள்; அறிந்தார்கள்; உணர்ந்தார்கள். ஆனந்தத்தினால் பூக்களைச் சொரிந்தார்கள். பத்தியினால் அருச்சனையுஞ் செய்தார்கள்.

மலர்கள் மண்ணின் மேற்பரப்பை மறைத்தன. துந்துபி நாதம் வானத்தை நிறைத்தது. எல்லா உயிர்களும் பெருமகிழ்ச்சியை உணர்ந்தன. “சித்திரையிற் சதயமாந் திருநாளில்”- நாயனாருக்கு மட்டும் மாதமும் நட்சத்திரமும் கூறியிருக்கிறார் சேக்கிழார்.

**மங்கலம்:-** நாயன்மார் அவதரிக்கும் போதும் இறைவனடி சேரும் போதும் மங்கலக்குறிகள் தோன்றும். அந்தநாள்களை மங்கல நாள்களாகவே நாம் கொள்ள வேண்டும். முத்தியடைந்த நாள்களைக் குருபூசை நாள்களாக –திருவடிபூசை நாள்களாகக் கொள்ளவேண்டும்.

மங்கலம் என்றதனால் களியாட்டம் அல்ல. அமைதியான சூழலில் பத்தியோடு பாராயணம்,பூசை, அன்னதானஞ் செய்ய வேண்டும். புராணம்:-

**அடியனேன் ஆதரவால் ஆண்டவர சின்சரிதப்**
**படியையான் அறிந்தபடி பகர்ந்தேனப் பரமுனிவன்**
**கடிமலர்மென் சேவடிகள் கைதொழுது குலச்சிறையார்**
**முடிவில் புகழ்த் திருத்தொண்டின் முயற்சியினை மொழிகின்றேன்.**

ஒரே பாடலில் ஒரு சரித்திரத்தை முடித்தும் மறுசரித்திரத்தின் தொடக்கத்தை அறிவித்தும், சேக்கிழார் வழமையாகப் பாடுவார். இங்கும் இப் பாடலில் அப்பரைப் “பரமுனிவர்” என்றார். முற்பிறப்பில் முனிவர் என்ற குறிப்பும், இப்பிறவியில் அதற்கும்ட மேலான நிலையும், நமது கணிப்புக்கு அப்பாற்பட்டவரும் என்ற தன்மையும் கண்டு அப்படிக் கூறினார். (பர-அப்பாற்பட்ட, கடந்த) மேலும் ‘கடிமலர் மென் சேவடிகள் கை சேர்த்து வைத்தார’ ‘-கடி, மலர் மென், சே- அடிகள். உண்ணிறைந்த பெரும் பக்தி சேக்கிழார் கொண்டிருந்தார். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சரித்திர முடிவுப் பாடலில் இப்படி அமையவில்லை. சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திர முடிவிலும் அப்படி அமையவில்லை.

**திருச்சிற்றம்பலம்**
**திருநாவுக்கரசு நாயனார் திருவடிகள் வாழ்க!**

# எனக்குப் 'பிடித்த' பத்து

- தவம்

கடவுள் மீது அன்பு செலுத்துவது பத்தியாகும். பத்தி என்றால் என்ன? பல்லாயிரக் கணக்கான அருட் பாடல்களை நம்முன்பு வாழ்ந்த அருளாளர்கள் பலர் பாடி வைத்துள்ளனர். தேவாரம், திருவாசகம் முதலான சைவத் திருமுறைகளும் ஆழ்வார்கள் பாடியுள்ள வைணவத் திருப்பாசுரங்களும் பத்தி என்றால் என்ன என்ற கேள்விக்கு விடை தருகின்றன. இவற்றிலே சிலவற்றையாவது நாம் படித்துத் தினந்தோறும் பாராயணம் செய்து வருவதால் இறையருளைப் பெறலாம். நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பதாலும் நமக்கு இறைபத்தி ஏற்படும். எந்த மதத்தவர் ஆனாலும் இறைபத்தி இருக்குமானால் எமது அடியார்கள் வரலாறுகளை, அருட்பாடல் களைப் படித்தால் மனம் உருகுவார்கள். இதற்குச் சிறந்த உதாரணம்: ஜி யு போப் என்ற ஆங்கிலேயர் திருவாசகம் பற்றி கடிதம் எழுதியபோது கண்ணீர் சிந்திய கதையாகும்.

மாணிக்கவாசகரின் பிடித்தபத்து என்ற பதிகம் அவரின் பத்தி உணர்வை எவ்வாறு தெரிவிக்கிறது என்று பார்ப்போம். அரிமர்த்தன பாண்டியன் தன்னுடைய மந்திரியான மணிவாசகரைக் குதிரைகள் வாங்கவெனத் தொண்டித்துறைக்கு அனுப்புகிறார். மணி வாசகரும் குதிரை வாங்கப் போகிறார். திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் சிவபெருமான் குரு வடிவில் வீற்றிருந்தார். தாயைக் கண்ட குழந்தைபோல மணிவாசகர் ஓடிச்சென்று குருவிடம் சரணடைந்தார். ஆண்டவனின் அருட்பார்வையால் (நயன தீட்சை) மணிவாசகருக்கு மெய்ஞ்ஞானம் பிறந்தது. ஆண்டவனைத் தவிர உலகிலுள்ள எல்லாவற்றையும் மறந்தார். குதிரை வாங்கவெனக் கொண்டுவந்த பொருள் அனைத்தையும் குருவின் பாதத்தில் வைத்துவிட்டார். அது கோயிற் திருப்பணிக்குச் செலவானது.

இறைவன் தன்னை ஆட்கொண்ட விதத்தையும் அதனால் தான் பெற்ற பெரும் பேற்றையும் மணிவாசகர் வியந்து பாடுகிறார். 'இறைவன் தானகவே வந்து என்னை ஆட்கொண்டு விட்டானே! அதற்கு நான் தகுதியுள் ளவன்தானா?' என்று தன்னைத்தானே கேட்டு இறைவனின் பேரருட்கருணையை எண்ணி எண்ணி உள்ளம் உருகுகிறார். ஏழை ஒருவனுக்கு எதிர்பாராத விதத்தில் பெரும் பொருள் கிடைத்தபோது அவன் எப்படி அதைப் பத்திரமாகப் பாதுகாக்கவேண்டும் என்று துடிப்பானோ அதுபோல மணிவாசகரும் தன்னை ஆட்கொண்ட இறைவன் தன்னை விட்டு விலகிப்போய்விடக்கூடாதே என்று துடிக்கிறார். அதை ஒவ்வொரு பாடல் இறுதி வரியிலும் 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன், எங்கு எழுந்தருளுவது இனியே?' என்று பாடுகிறார். தாயின் காலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, 'என்னை விட்டு எங்கேயும் போய்விடாதே!' என்று அடம்பிடிக்கும் குழந்தையைப் போல மணிவாசகர் இறைவன் திருவடியைப் பற்றி நின்று பாடும் பாங்கினைப் பிடித்த பத்து என்ற பதிகம் காட்டுகிறது.

**உம்பர்கட் கரசே!:**

'தேவர்களின் தேவனே! முடிவில்லாத யோகமே! புதுப் பொருளாகத் தோன்றி அருள் பழுத்த செல்வமே! என் குடி முழுவதையும் ஆண்டு நற்பேறு தந்த செம்பொருட் துணிவே! சீருடைக் கழலே! செல்வமே, சிவபெருமானே! என் பொருட்டுத்தான் உன் பதத்தைச் சிக்கெனப் பிடித்தேன். இனி என்னை நீவிர் விட்டு எங்குமே போகமுடியாது' என்று கூறுகிறார்.

**விடைவிடாதுகந்த விண்ணவர் கோவே!:**

'விண்ணவர் கோவே! பாவியேனுடைய மெய்ப்பொருளே! (உலகிலுள்ளவை யாவும் அழியத்தக்கவை. இறைவன் அழிவற்ற உண்மைப் பொருள்) மண்ணுலக வாழ்வில்

நான் அழுந்திப் போகாமல் தடுத்தாண்கொண்ட கருணைக்கடலே! இடைவிடாது உன் கழலை இறுக்கிப் பிடித்துக்கொண்டேன். இனி என்னை விட்டு எப்படிப் போவாய்? சொல்' என்று கேட்பதுபோல உள்ளது.

**அம்மையே! அப்பா!:**
'அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே! அன்புக்கடலில் விளைந்த அமுதம் போன்றவனே! பொய்யான இந்த உலக வாழ்க்கையில் காலத்தை வீணாக்கிக்கொண்டு இருக்கும் அற்பனாகிய எனக்கு மேன்மயுள்ள சிவபதத்தைத் தந்த செல்வமே! (குழந்தைகளைப் பெற்றோர் அன்பாகச் செல்வமே என்று அழைப்பர்) சிவபெருமானே! இப்பிறப்பில் உன்னைச் சிக்கெனப் பிடித்துவிட்டேன். இனி எங்குமே போய்விட மாட்டாய் அல்லவா?' என்று கேட்கிறார்.

**அருளுடைச் சுடரே:**
'அருட்பெருஞ் சோதியே! ஞானத்தில் பழுத்த அருங்கனியே! அருந்தவ முனிவர்களுக்கு அருட்பொருளை வழங்கும் போக வடிவானவனே! புகழ்ந்துரைக்கு அப்பாற்பட்டவனே! அடியார்களின் அஞ்ஞானத்தை நீக்கி அருள் வழங்கும் ஞானச் செல்வமே! அறியாமையாகிய இருளிற் கிடந்த நானும் உன்னைச் சிக்கெனப் பிடித்துவிட்டேன். இனி எனக்கு என்ன குறை?' என்று இறையுணர்வு பெற்ற மணிவாசகர் இறையருள் எத்தகையது என்பதை யாம் அறியும் வண்ணம் கூறுகிறார்.

**ஒப்புனக்கில்லா ஒருவனே!:**
'தன்னிகரற்ற இறைவா! என் உள்ளத்துட் தோன்றிய ஞானச் சுடரே! மெய்ப்பொருள் எது என்று அறியாதவர்க்கு அந்த மெய்ப்பொருளை உணர்த்தும் அன்பு உருவானவனே! விதந்துரைக்க முடியாத அருட்பெருஞ் சுடரே! செல்வமே! சிவபெருமானே! எங்கே போவதென்று தத்தளித்துக்கொண்டிருந்த என்னை வழிப்படுத்திய உன்னை இறுக்கிப் பிடித்துக்கொண்டேன்' என்று தன்னை இறைவன் ஆட்கொண்ட அருட்பெருமையைக் கூறுகின்றார்.

**அறவையேன் மனமே கோயிலாக் கொண்டான்:**
'அநாதை போல ஆதரவற்றிருந்த என் மனத்தில் குடிகொண்டு எனக்குப் பேரானந்தம் எதுவென்று உணர்த்தி எனது பிறவிப் பிணியை நீக்கியது மட்டுமன்றி என் குடும்பம் எல்லாவற்றையும் ஆட்கொண்டவனே! பிஞ்ஞகா! பெரிய எம்பொருளே! அடியவனுடைய செல்வமே! சிவபெருமானே! பிறப்பு, இறப்பு எனும் பிணி நீங்க உன்னைச் சிக்கெனப் பிடித்துள்ளேன். அதனால் என் பிறவித்துன்பம் அகன்றுவிடும்' என்கிறார்.

**பாசவேரறுக்கும் பழம்பொருள்:**
'என்னைப் பற்றி நின்ற ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசங்களின் வேரை அறுக்கும் இறைவனாகிய உன்னைப் பற்றுமாறு என்னைப் பணித்து (அவனருளாலே அவன் தாள் வணங்கி) எனது பூசையை ஏற்று என் மனத்தே எழுந்தருளி உன் மலர்ப் பாதங்களை எனக்குக் காட்டியருளிய ஞானச் சுடரே! செல்வமே! சிவபெருமானே! ஈசனே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்று ஆண்டவன் மீது பொங்கி எழும் பேரன்பினால் பலவாறாக இறைவனை இப்படி அழைக்கிறார்.

**அத்தனே, அண்டரண்டமாய் நின்ற ஆதியே:**
'தந்தையே! அண்ட சராசரமெல்லாம் நிறைந்து ஆதியும் அந்தமும் இல்லாதவனே! அறிவானவனே! பத்தர்கள் சிக்கெனப் பிடித்த செல்வமே! சிவபெருமானே! அடியார்களை உய்விக்கும் பித்தனே! எல்லா உயிர்களுமாகி, அவை அல்லாதனவாய் தனித்து நிற்பவனே! உன்னைச் சிக்கெனப் பிடித்துள்ளேன். என்னை விட்டு நீ எங்கேயும் போக முடியாது' என்று கூறுகிறார்.

**பால் நினைந்தூட்டும் தாயினும்:**
'உலகில் தாயைவிடக் குழந்தை மீது அன்பு கொண்டவர்கள் இல்லை. தாய் தன் குழந்தைக்கு எது வேண்டுமென்று குழந்தை கேட்காமலே தானாக உணர்ந்து செய்ய வேண்டியதைச் செய்வாள். இந்தத் தாயைவிட இறைவன் மேலான அன்புகொண்டு என் உடல் உணர்வை ஒடுக்கி உயிரை ஈடேற வைக்கும்

ஞான ஒளியை எனக்கு அளித்து ஒப்பற்ற ஆனந்தத்தேனை அள்ளித் தந்து என்னைவிட்டு நீங்காது நின்றருள்புரியும் செல்வமே! சிவபெருமானே! யான் உன் பாத கமலங்களை இறுக்கிப் பற்றிவிட்டேன். இனி உன்னை என்றுமே விடுவதில்லை' என்பதுபோல 'எங்கு எழுந்தருளுவது இனியே' என்கிறார்

**புன்புலால் யாக்கை:**

'எலும்பாலும் தசையாலும் ஆன என் உடலைப் புல்லரிக்கச் செய்யும் இன்பானுபவத்தை எனக்கு அருளி என் மனத்தே கோயில் கொண்டருளி என் காட்சிக்கு எளியவனாகி என்னை ஆட்கொண்ட ஈசனே! மாசிலா மணியே! துன்பம் பிறப்பு இறப்பு என்னும் பிணிகளைப் போக்கவல்ல அருட்பெருஞ் சோதியே! இன்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன். எங்கு எழுந்தருளுவதினியே' என்று பாடுகிறார்.

இறைவன் அருட்பெருங் கருணையினால் தன்னை வந்து ஆட்கொண்டதையும், அதனாற் தான் பெற்ற பெரும் பேற்றையும், பேரானந்தத்தையும், தான் எக்காரணங் கொண்டும் அதனை இழக்கத் தயாராக இல்லை என்ற உறுதியையும் மணிவாசகர் இந்தப் பிடித்த பத்து என்னும் பதிகம் மூலம் காட்டுகிறார்.பத்தியால் நாமும் பரம்பொருளை உணர்ந்து பரவசமடையலாம், பெரும்பேறு அடையலாம் என்பதனை மணிவாசகர் உறுதிப்படுத்துகிறார்.

இந்தப் பத்துப் பாடல்களே இறையுணர்வினால் வரும் பேரானந்தத்தை உணர்த்துகிறதென்றால் திருவாசகம் முழுவதும் படித்தால் எப்படி இருக்குமென்பதை பின்வரும் வள்ளலார் பாடல் கூறுகிறது.

**வான்கலந்த மாணிக்க வாசக!நின் வாசக்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து**
**ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

இப் பாடலில் ஏழுமுறை கலந்து என்ற சொல் இடம்பெறும். உடம்பிலுள்ள ஏழாதாரம் தூய்மை பெற்று இலங்கி மரணமிலாப் பெருவாழ்வு வாழ திருவாசகம் துணை செய்யும் என்னும் கருத்துக் குறிப்பு வள்ளலார் பாடலில் உள்ளதைக் காணலாம்.

---

## இது நியாயமா?

ஒவ்வொரு உயிரும் அதனதன் அளவில் உயர்ந்ததுதான். நம்முடைய சட்டைப் பையில் பணம் வைக்கிறோம். நாம்தானே அதை எடுக்கவேண்டும்? வேறு ஒருவர் எடுத்தால் தவறுதானே? அதைப்போல கோழி, ஆடு போன்ற பிராணிகளின் உடம்பிலுள்ள உயிரை நாம் வைக்கவில்லை. அந்த உடல்களிலிருந்து நாம் வைக்காத உயிரை எடுக்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது? நம் பெட்டியில் நாம் வைத்த பணத்தை வேறு ஒருவர் எடுத்தால் எப்படித் தண்டிக்கப்படுவாரோ, அதைப்போல பிற பிராணிகளின் உடம்பில் யாரோ வைத்த உயிரை நாம் எடுப்பதும் தண்டனைக்குரிய செயல்தானே?

**பொல்லாப் புலாலை நுகரும் புலையைரை**
**எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே**

- திருமந்திரம்

**நன்றி: தமிழ்வேதம்**

# சோமாசிமாற நாயனார்

- மு. சிவராசா

**செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்**

பெரியபுராணத்தில் போற்றப்படும் நாயன்மார்கள் பெரியவர்கள். அதோடு அமையாது அதற்கும் மேம்பட்டவர்களாக அவர்கள் ஒவ்வொருவரும் வாழ்வின் தேவைக்காக ஊதியம் பெறுவதற்குரிய வேலையை, ஒரு தொழிலை வெளியே மேற்கொண்டிருந்தனர். அதற்கும் அப்பால் ஒரு கொள்கையை, ஒரு குறிக்கோளைக் கொண்டிருந்தனர். தம் உயிர் போவதானாலும் கொண்ட கொள்கையின் பிடியைக் கைவிடாது இருந்தனர். அவருட் சிலர் செயற்கரிய செய்கைகளைச் செய்தனர். ஆயின், இன்னும் சிலர் எல்லோராலும் கடைப்பிடிக்கத் தக்க கொள்கைகளில் விடாப்பிடியாக இருந்து வெற்றி கண்டனர். அவை இன்றும் நாம் பின்பற்றக்கூடியவையே! எனினும் நாம் அவற்றை நினைக்கவும் அஞ்சுகிறோம்.

**வாளால் மகவரிந் தூட்ட வல்லேன் அல்லன் மாது சொன்ன**
**சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லன் தொண்டு செய்து**
**நாளாறிற் கண்ணிடந் தப்ப வல்லேன் அல்லன் நானி னிச்சென்**
**றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி அப்ப ருக்கே.**

என்று கழிவிரக்கப்பட்ட அடியவரைப்போல வாழ்நாளை வீணாளாக்குகிறோம். நாயன்மார்கள் சிலர் உலகம் மெச்சும்படி நல்லனவே செய்து, நல்லனவே நினைந்து புகழோடு வாழ்ந்தனர். ஆயினும் மற்றும் சிலர் பஞ்சமா பாதகங்கள் என மக்களால் ஒதுக்கப்படும் செயல்களைச் செய்து வாழ்ந்தனர். தன் ஒரே மகனைக் கறிசமைத்து சிவனடியார் ஒருவருக்கு உணவளிக்க முயன்றார் சிறுத்தொண்டர் நாயனார். சூதாடியும் அதன் விளைவாக ஆயுதம் உபயோகித்தும் வாழ்ந்தவர் மூர்க்க நாயனார். தந்தையின் காலை வெட்டியவர் சண்டேசுரர். பெண்ணின் கையையும் மூக்கையும் அறுத்த நாயன்மார்களும், ஏன், உறவினர்களைக் கொலை செய்தவர்களுங் கூட போற்றப்படுகிறார்கள்.

தமது குருவை வழிபட்டு வீடுபேறு அடைந்தவர்களும் சிவபூசைகளை மானசீகமாகவோ, செயல் மூலமாகவோ செய்தவர்களும் பஞ்சாட்சர செபம் மட்டுமே செய்தவர்களும் சிவனடியார்களைப் பூசித்தவர்களும் இங்கே போற்றப்படுகிறனர். மீன் பிடித்தல் தொழிலையே குலத் தொழிலாகக் கொண்ட ஒரு பத்தர் வறுமை மிஞ்சிய காலத்தில் வலையில் ஒரேயொரு மீன் அகப்பட்டபோதும் தமது கொள்கைப்படி இறைவனுக்கு அந்த ஒரு மீன் கொடுக்கவேண்டும் என்று அந்த மீனை மீண்டும் நீரில் விட்டவர். அதிபத்தநாயனார் என்ற பெயரில் இப்புராணத்தில் அவர் போற்றப் படுகிறார்.

அடியார்க்கு அன்னதானம் செய்வதையே கொள்கையாகக் கொண்டு போற்றப்படுபவருள் இளையான்குடி மாறன் நாயனார் ஒருவர். கூன்பாண்டியனாக இருந்து பின் திருஞானசம்பந்தர் கருணையினால் நின்றசீர் நெடுமாறன் ஆகியவர் மங்கையர்க்கரசியாரின் கணவராகிய பாண்டியமன்னர் மற்றொருவர். மூன்றாமவர் அம்பரான் என்ற ஊரில் அவதரித்து சிவதொண்டு, அடியார் தொண்டில் ஈடுபட்டு யாழின்மென்மொழியாள் பங்கரான ஈசனை மலர்களால் வாழ்த்துபவர் எத்தன்மையர் என்றாலும் ஈசனுக்கன்பராகில் அத்தன்மையர்தான் நம்மை ஆள்வோர்

என்ற கொள்கையைக் கொண்டவர். மேலும், சித்தம் தெளிய சிவன் ஐந்தெழுத்து ஓதுவதை நித்த நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குருவாகக் கொண்டு வாழ்ந்து சிவலோகப் பதவி பெற்றவர். என்ன என்ன கடமைகளைப் புறந்தள்ளி வாழ்ந்தாலும் பிறவிப் பிணியிலே உழன்று வீடுபேறடையத் தகுதியற்றவர்களாக இருப்பவர்கள் எப்படியென்பதை அப்பர் அடிகள் பின்வருமாறு அருளுகிறார்.

**திருநாமம் ஐந்தெழுத்துஞ் செப்பா ராகில்**
**தீவண்ணர் திறமொருகாற் பேசா ராகில்**
**ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்**
**உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்**
**அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்**
**அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்**
**பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்**
**பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே**

# கானல் நீர்

## காஞ்சிப் பெரியவர் அருள் வாக்கு

பாலைவனங்களில் நிறைய மான் கூட்டங்கள் இருக்கும். அவற்றுக்கு வெயில் காலத்தில் 'ஹா ஹா' என்று தாஹம் எடுக்கும். ஆனால், பாலைவனத்தில் ஜலம் கிடைக்குமா? கிடைக்காவிட்டால் போகிறது. அங்கே ஜலமே கிடைக்காது என்பதாவது தெரிந்துவிட்டால் மான் கூட்டம் பாலைவனத்தை விட்டு வெளியிலே உள்ள நீர் வளமுள்ள நாட்டுக்கு ஓடிவந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். ஆனால், இதையும் செய்ய முடியாமல் ஜலமே இல்லாத பாலைவனத்தில் ஜலம் இருக்கிறமாதிரி ஒரு ஏமாற்று ஜாலம் நடக்கிறது. அதுதான் கானல் நீர் என்பது. ப்ரதிபிம்பம் (reflection) ஒளிச்சிதறல் (refraction) 'தியரி'களைக் கொண்டு ஸயன்சில் இதை விளக்குகிறார்கள்.

மொத்தத்தில் இது என்னவென்றால், பாலைவனம் மாதிரியான ஒரு விஸ்தாரமான வெளியில் ரொம்பவும் உஷ்ணம் ஏறிப்போய், காற்றுப் ப்ரதேசம் இலேசாகிவிடுகிறபோது, தூரத்தில் இருந்து பார்க்கிறவர்களுக்கு ஜலத்திலே ப்ரதிபிம்பம் தெரிகிறமாதிரி மண்ணிலேயே தெரிகிறது. தூரத்திலிருந்து பார்க்கிறபோது வெறும் மணற்பாங்கான பூமியே ஒரு நதி ஓடுகிறமாதிரித் தெரியும். அதை நோக்கிப் போகப் போக அதுவும் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட கானல் நீரைப் பார்த்து மான்கள் வாஸ்தவமான ஜலம் என்று நினைத்து அதைத் தேடித் தேடி ஓடி, கடைசியில் முடியாமல் களைத்து, வெயிலின் உஷ்ணம் தாங்காமல் ரொம்பவும் பரிதாபமாக ஜீவனை இழக்கும்.

ஸம்ஸ்க்ருதத்தில் 'ம்ருக்' என்றால் தேடுவது என்று அர்த்தம். ஓயாது எதையாவது தேடி ஓடிக்கொண்டே இருப்பதுதான் 'ம்ருகம்'. கானல் நீரைத் தேடி ஓடி மடிவது மான் என்ற ம்ருகத்தின் பரிதாபமான கார்யமாக இருக்கிறது!

லோகமெல்லாம் மாயை என்று அத்வைத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. 'அதெப்படி மாயை? லோகம்தான் கண்ணுக்கு தெரிகிறதே!?' என்று கேட்டால், 'கானல் நீர் கூடத்தான் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் அது நிஜமாகிவிடுமா?' அப்படித்தான் இந்த லோகமும் கானல் நீர் என்று க்ரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

நன்றி: கல்கி தகவல்: லண்டன் சபரி

பாரத பூமியில் முற்காலத்தில் எழுபதுக்கு மேலான ஆன்மிகப் பிரிவுகள;(religious sects) இருந்தன. ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் அவைகளில் நீக்க வேண்டியவைகளை நீக்கி மற்றையவைகளை ஆறு பெரும் பிரிவுகளாகச் சீரமைத்தார். அவை காணபத்யம், கௌமாரம் சைவம், வைணவம், சாக்தம், சௌரம் என்பன.

ஆயினும் சைவம், வைணவம் என்ற இரு பிரிவுகளும் மற்ற நான்கையும் இணைத்துக் கொண்டிருக்கின்றன. சக்தி, கணபதி, முருக உபாசகர்கள் யாவரும் ஸ்மார்த்தர்களோ அல்லது வைஷ்ணவர்களோ தான்.

ஆங்கிலத்தில் you can love me or hate me, but you cannot ignore me என்று கூறுவார்கள்.. அதாவது என்னைப் புகழ்வதோ அல்லது இகழ்வதோ உன் விருப்பம். ஆனால் என்னை நெகிழ (ignore/give up) மட்டும் விடமுடியாது என்பது பொருள். வைணவர்கள் திருமாலை உயர்வாகப் பேசுவதும், சைவர்கள் சிவனைப் போற்றுவதும் ஏற்கக் கூடியது. ஆயினும் முன்னவர்கள் அரனையும் பின்னவர்கள் அரியையும் தத்தம் நூல்களில் குறிப்பிடாமல் இல்லை.

# சைவமும் வைணவமும் - ச.வேதநாராயணன்

நாலாயிர திவ்யப் பிரபந்தங்களில் சிவனைப் பற்றியும், சைவத் திருமுறைகளில் திருமாலைப் பற்றியும் ஏராளமான குறிப்புக்கள் வருகின்றன. இந்தக் கட்டுரையில் பிரபந்தங்களில் காணப்படும் சிவனைப் பற்றியச் செய்திகளைக் காண்போம். இக்கட்டுரையின் விரிவு அஞ்சி சிலவற்றை மட்டும் இங்கே எழுதுகிறேன். ஆழ்வார்களின் பெயர், பாட்டின் எண்(ஒன்று முதல் 4000வரை) குறிப்பு வரும் வரிகள் ஆகியவை தரப்படுகின்றன.

அரன் அரியை இணைத்துச் சொல்லப்பட்ட அழகான பாசுரத்தைப் பார்ப்போம்.

**அரன் நாரணன் நாமம் ஆன் விடை புள் ஊர்தி**
**உரை நூல் மறை உறையும் கோயில் வரை நீர்**
**கருமம் அழிப்பு அளிப்பு கையது வேல் நேமி**
**உருவம் எரி கார் மேனி ஒன்று**

(பொய்கை ஆழ்வார்-முதல் திருவந்தாதி-பாடல் எண் 2086)

பெயர்கள்: சிவன் = திருமால், வாகனம்: ரிஷிபம் = கருடன், உபதேசம்: சித்தாந்தம் = வேதம் இருக்கும் இடம்: கைலாயம் = திருப்பாற்கடல், செயற்பாடு: சம்ஹாரம் = ஸ்திதி, ஆயுதம் சூலம் = சக்கரம், தோற்றம்: ஜுவாலை= கறுப்பு. இருவரும் ஒன்றே.

**சங்கரன் என்று குறிக்கப்படும் சிவன்**

பெரியாழ்வார் - கண்டம் என்னும் திருப்பதி-0393 – சங்கரன் சடையினில் தங்கி

திருமழிசை ஆழ்வார் - நான்முகன் திருவந்தாதி-2382—நான்முகனாய்ச் சங்கரனைத்தான் தான் படைத்தான்.

**சிவன் என்ற சொல் உள்ள சில பாடல்கள்:**

திருமழிசை ஆழ்வார் = திருச்சந்த விருத்தம்-0760—தாது உலாவு கொன்றைமாலை துன்னு

செஞ்சடைச் சிவன் (மிளிர் கொன்றை அணிந்தவனே – மழபாடியுள் மாணிக்கமே)
திருமங்கை ஆழ்வார் - பெரிய திருமொழி- 1068 – புரம் எரி செய்த சிவன்(திரிபுரம் எரித்த சிவ பெருமான்)
திருமங்கை ஆழ்வார் - பெரிய திருமொழி-1138- தீ வடிவின் சிவன் (சோதியே சுடரே சூழொளி விளக்கே)

திருமழிசை ஆழ்வார் - வாழ்த்துப்பா 2382 - ஏர் ஆர் சிவன்

நம்மாழ்வார் - திருவாய்மொழி 3086 - தாமோதரன் உரு ஆகிய சிவன்
நம்மாழ்வார் - திருவாய்மொழி-3712 - படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம பரம்பரன் சிவப்பிரான்

**சடை தரித்த பெருமான் என்று சிவனைக் குறிக்கும் பாடல்கள்:**
பெரியாழ்வார் - 0332 --நீர் ஏறு செஞ்சடை நீலகண்டன் (கங்கை சடையுட் கரந்தாய்)
குலசேகர ஆழ்வார் - வேங்கடத்தில் இருத்தல் - 0684 - பிறை ஏறு சடையான் (மாசறு திங்கள் கங்கை முடிமேல்)
தொண்டரடிப் பொடியாழ்வார் - 0872 - பெண் உலாம் சடையினான்
திருமங்கை ஆழ்வார் - திருநறையூர்-1516 - ஆறும் பிறையும் அரவமும் அடம்பும் சடைமேல் அணிந்து
பொய்கை ஆழ்வார் - முதல் திருவந்தாதி-2082 - பொன் திகழும் மேனிப் புரிசடை அம் புண்ணியன்
திருமழசை ஆழ்வார் - நான் முகன் திருவந்தாதி-2456- தீக் கொண்ட செஞ்சடையான்
நம்மாழ்வார் - திருவாய்மொழி-3308-- தடம் புனல் சடைமுடியன் தனி ஒரு கூறு அமர்ந்து உறையும் (திருமாலின் ஒரு பகுதியாக இருப்பவன்)

**பிறை சூடிய எம் பெருமான்:**
திருப்பாணாழ்வார் - அமலனாதிபிரான்-0932-துண்ட வெண் பிறையன் (பித்தா பிறை சூடி பெருமானே)
நம்மாழ்வார் - திருவாய்மொழி -2996--ஒற்றைப்பிறை அணிந்தான்.
**இடபத்தின் மீது உலாவும் சிவபெருமான்:**
பெரியாழ்வார் - அரங்கனை வேண்டல் -0423 - ஒற்றை விடையன்
குலசேகர ஆழ்வார் - தில்லைச் சித்திர கூடம்-0743 - சீதைக்கு ஆகிச் சினவிடையோன் சிலையிறுத்து

**அரன் எனப்படும் சிவபெருமான்:**
திருமங்கை ஆழ்வார் - பெரிய திருமொழி--திருநாங்கூர்-1247 - அன்று அயனும் அரன் சேயும் (முருகன்)
நம்மாழ்வர் - திருவாய்மொழி-2927- நன்று எழில் நாரணன் நான்முகன் அரன் என்னும் இவரை
நம்மாழ்வார் - திருவாய்மொழி-3090 -புணர்க்கும் அயன் ஆம் அழிக்கும் அரன் ஆம்
நம்மாழ்வார் - திருவாய்மொழி-3990 -அம்பரம் நல்சோதி அதனுள் பிரமன் அரன் நீ

**முக்கண் உடைய சிவபெருமான்:**
திருமங்கை ஆழ்வார் - பெரிய திருமொழி-எவ்வுள்-1063 - முக்கண் நம்பி (எண்டோள் முக்கன் எம்மானே)
நம்மாழ்வார் - திருவாசிரியம்-2581 - முக்கண் ஈசனொடு

திருமங்கையாழ்வார் - திரு எழுகூற்றிருக்கை-2672 -முக்கண் நால் தோள்.....சடையோன்
திருவரங்கத்தமுதனார் - இராமாநுச நூற்றந்தாதி-2812 - கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண் (முருகனையும் பிள்ளையாரையும் குறிக்கும் பாடல்)
நம்மாழ்வார் - திருவாய்மொழி - 3403 -உரைக்கின்ற முக்கண் பிரான் யானே
நம்மாழ்வார் - திருவாய்மொழி - 3601-நேர் சரிந்தான் முக்கண் மூர்த்தி கண்டீர் அப்பன்
நம்மாழ்வார் - திருவாய்மொழி - 3619 - அங்கு அயர் முக்கண் பிரான்
நம்மாழ்வார் - திருவாய்மொழி - 3666--- வாணபுரம் புக்கு முக்கண் பிரானைத் தொலைய வெம் போர்கள் செய்து
நம்மாழ்வார் - திருவாய்மொழி - திருச்செங்குன்றூர் --3713- அமர்ந்த மாயோனை முக்கண் அம்மானை
நம்மாழ்வார் - திருவாய்மொழி - திருமாலிருஞ்சோலை --3963 -என் அம்மானே என்னும் முக்கண் அம்மானும்
நம்மாழ்வார் - திருவாய்மொழி - ஆழ்வார் இறையாட்சி -3990-முனியே நான்முகனே முக்கண் அப்பா

**தோலை அணிந்த சிவபெருமான்: (அதள்-தோல்)**

திருமங்கை ஆழ்வார் - பெரிய திருமொழி-திருக்குறுங்குடி-0798-அக்கும் புலியின் அதளும் உடையார்
திருமங்கை ஆழ்வார் - பெரிய திருமொழி -1935 -மல்கிய தோளும் மான் உரி அதளும் உடையவர் தமக்கும்


சிவனைப் பற்றிய குறிப்புகளில் சிலவற்றை மேலே கொடுத்துள்ளேன். குன்றே அனைய குற்றங்கள் குணம் ஆம் என்றே கொள்ளவும் (மாணிக்கவாசகர்)

சைவத் திருமுறைகளில் உள்ள திருமாலைப் பற்றியக் குறிப்புகளை இன்னொரு பொழுது காண்போம்.

## ஆண்டாள் (சூடிக்கொடுத்த நாச்சியார்)

ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஓர் அந்தணர் இருந்தார். விஷ்ணுவையே சதா மனதில் இருத்தியவர் என்பதால் அவர் பெயர் விஷ்ணுசித்தர் ஆனது. அலங்காரப் பிரியரான திருமாலுக்குத் தினமும் பூமாலை புனைந்து சாத்தி மகிழ்வது அவர் தொண்டு.
ஒரு நாள் அவர் நந்தவனத்தில் அழகான பெண்குழந்தை ஒன்றைக் கண்டார். தெய்வ அம்சம் நிரம்பிய அழகான அந்தக் குழந்தையை எடுத்துவந்து வளர்த்தார். அந்தக் குழந்தையோ வளர வளர திருமாலையே மணம் முடிக்கவேண்டும் என்ற நினைவையும் தன்னுள் வளர்த்தது. விஷ்ணுசித்தர் புனைந்த மாலையை அவருக்குத் தெரியாமல் தானே அணிந்தபின் திருப்பி வைக்க அவரோ அது தெரியாமல் பெருமாளுக்கு அதைச் சூட்டிவந்தார்.


ஒரு நாள் மாலை அணிவிக்க சென்றபோது மாலையிலே தலைமுடி இருப்பதைக் கண்ட விஷ்ணுசித்தர் அதை நீக்கி வேறுமாலை புனைந்து பெருமாளுக்கு அணிவித்தார். பெருமாள் அந்த மாலையை ஏற்காது ஆண்டாள் அணிந்து கொடுத்த மாலையையே தாம் விரும்புவதாக விஷ்ணுசித்தருக்கு உணர்வித்தார்.
ஆண்டாள் தான் அணிந்தபின் இறைவனுக்கு அந்த மாலையை அணிவித்ததால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற பெயர் பெற்றார். இருபது திருப்பாடல்களை - திருப்பாவை பாடல்களை அவர் திருமால் மீது பாடியுள்ளார்.
விஷ்ணுசித்தரும் (பெரியாழ்வார்) இறைதொண்டு செய்து இறைபதம் அடைந்தார்.


Cakes&Bakes
Bakers & Confectioners
SUITABLE FOR VEGETARIAN
Just Cakes
Make your celebration savoury !
BABY
020 8551 2114
59 High Street Barkingside Ilford. IG6 2AD

உ
சிவமயம்

# ஸ்ரீ நகுலாம்பிகை உடனுறை ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி திருக்கோயில்

ஈழத்தின் பழம்பெரும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக யாழ்குடாநாட்டில் தலைசிறந்த சிவஸ்தலமாக விளங்குவது நகுலேஸ்வரம். கடலின் உவர்நீரோடு ஊற்றின் நன்னீர் சேர்வதால் கீரிமலைத் தீர்த்தம் தனிச்சிறப்புப் பெறுகின்றது. நகுலமுனிவரின் கீரிமுகம் மாறுவதற்கும் சோழ இளவரசி மாருதப்புர வீகவல்லியின் குதிரை முகம் மாறுவதற்கும் இத் தீர்த்தமே காரணமாய் இருந்தது என்று புரா ணங்கள் பகர்கின்றன. ஆடி அமாவாசைத் தினத்தன்று தம் முன்னோரை நினைந்து தீர்த்தமாடிக் கீரிமலைச் சிவன் கோயில் சென்று பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்றும் வழிபடு கின்றனர்.



வரலாற்றுச் சிறப்புப்பெற்ற இவ்வாலயம் பலமுறை சேதமடைந்தாலும் ஒவ் வொருமுறையும் புதுப் பொலிவுடன் மீண்டும் தோன்றுவது உலகம்வாழ் சைவ மக்களின் நற்பேறு.

முன்பொருகாலத்தில் இவ்வாலயம் கடற் கோளாற் கொள்ளப்பட்டது. பின்பு போத்துக்கேயரால் அழிக்கப்பட்டது. 1878ஆம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் ஆர்வத்தின் காரணமாய் புனருத்தாரணம் ஆரம்பிக்கப்பட்டு 1895ஆம் ஆண்டு மகத்தான குடமுழுக்கு வைபவம் நடைபெற்றது.

1947ஆம் ஆண்டில் சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களின் மறைவின் பின்னர் தற்போதைய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் தன்னுடைய 22ஆவது வயதில் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார்.

1990ஆம் ஆண்டு கேதார கௌரி விரத்ததை நூற்றுக்கணக்காணோர் ஆலயத்தில் அநுஷ்டித்துக்கொண்டு இருந்த போது விமானப்படையின் தாக்குதலுக்கு உள்ளாகி ஆலயம் பெருஞ்சேதமுற்றது. ஐயா அவர்களும் பக்தர்களும் இறைவன் கருணையினால் உயிர்தப்பினார்கள். அன்றே ஆலயத்தையும் உடைமைகளையும் விட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஏழு வருடங்களின் பின்னர் 1997ஆம் ஆண்டில் ஆலயத்திற்குச் செல்லும் அநுமதி கிடைத்தது. அன்று ஆரம்பித்த புனரமைப்பு வேலைகள் படிப்படியாக வளர்ந்து இன்று பூர்த்தி பெறும் நிலையை அடைந் துள்ளன.

**கரவருடம் தை மாதம் 23ஆம் நாள் 06-02-2012 மகாகும் பாபிஷேகம் எனப்படும் பெருஞ்சாந்திப் பெரு விழாவை நடத்துவதென்ற நம் பெருவிருப்புக்கு இறை அருள் துணைநிற்க வேண்டு மென்பதே எமது பிரார்த்தனை.**

நகுலேஸ்வர ஆலயம் தனியொருவருக்கோ, தனியொரு ஊரவர்க்கோ உரிய தலமன்று, அது அனைத்துலகச் சைவ மக்களின் சொத்து. மிகுதி வேலைகள் விரைவில் பூர்த்தியாகி, மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறி ஆலயம் பழம்பெருமையுடனும் புதுப்பொலிவுடனும் மீண்டும் பிரகாசிப்பதற்கு அடியர்களின் பேருதவி அவசியம் தேவை. ஆலய தர்மகர்த்தா சிவஸ்ரீ நகுலேஸ் வரக்குருக்கள் அவர்கள் விருப்பமும் அதுவே. அதை நாம் நிறைவேற்ற முயல்வோம்.

**நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்; நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!**

**Dr. க.சிவகுமார், செயலாளர் கீரிமலை சிவன்கோயில் அறக்கட்டளை U.K**

****

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஏப்பிரல் (14-04-2011) தொடக்கம் அக்டோபர் (31-10-2011) வரை**

| | | |
|---|---|---|
| 14.04.2011 | வியாழன் | 'கர' வருடப்பிறப்பு |
| 25.04.2011 | புதன் | நடேசர் அபிஷேகம் |
| 27.04.2011 | புதன் | திருநாவுக்கரசு நாயனார் குருபூசை |
| 20.05.2011 | வெள்ளி | திருஞானசம்பந்தர் குருபூசை |
| 25.06.2011 | சனி | சேக்கிழார் குருபூசை |
| 28.06.2011 | வியாழன் | அலங்கார உற்சவம் ஆரம்பம் |
| 07.07.2011 | சனி | நடேசர் அபிஷேகம், அலங்கார உற்சவம் பூர்த்தி |
| 13.07.2011 | புதன் | மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை |
| 16.07.2011 | சனி | கும்பாபிஷேக தினம் |
| 06.08.2011 | சனி | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை |
| 01.09.2011 | வியாழன் | விநாயகர் சதுர்த்தி |
| 10-09-2011 | புதன் | நடேசர் அபிஷேகம் |
| 28.09.2011 | புதன் | நவராத்திரி பூசை ஆரம்பம் |
| 05.10.2011 | புதன் | சரஸ்வதி பூசை |
| 06.10.2011 | வியாழன் | நவராத்திரி பூசை நிறைவு |
| 10.10.2011 | செவ்வாய் | நடேசர் அபிஷேகம் |
| 27-10-2011 | வியாழன் | கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| 31.10.2011 | திங்கள் | கந்தஷஷ்டி விரத நிறைவு |

**விசேஷ அறிவித்தல்: ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி கர வருடப்பிறப்பு தொடக்கம் தினமும் காலை 9 மணி முதல் 10.30 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.**

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ நடராசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# Accident Courtesy

வாகன விபத்தா?

BRANCH
**13 Progress Business Park**
**Progres Way,**
**Croydon**
**Surrey CR0 4XD**

BRANCH
**142 Pinner Road,**
**Harrow**
**Middlesex, HA1 4JE**

HEAD OFFICE
**Beechfield House**
**Lyme Green Business Park**
**Winterton Way,**
**Macclesfield**
**Cheshire, SK11 0LP**

BRANCH
**Trocoll House Wakering Road**
**Barking, Essex, 1G11 0TJ**



எம்மை நேரடியாகத்
தொடர்பு கொள்பவர்களுக்கு
எவ்வித கொமிஷனும்
அறவிடப்படமாட்டாது.
அதாவது 100% நஷ்டஈடு பெறுவீர்கள்

**Call us now**

**142, Pinner Road, Harrow HA1 4JE**
**Tel: 08002321523 / 020 8427 4060**
**Fax: 0845 8710197**
E-mail: info@accidentcourtesyltd.co.uk

"accident courtesy Ltd regulated by
ministry of justice our Authorisation
Number: CRM2523"

**We don't charge any commission for whoever calls directly**
**This means they get 100% compensation**

# Accident Courtesy



வாகன விபத்தா?

மாற்று வாகனம் தேவையா?
நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டுமா?

உங்களது விபத்து எவ்வாறு நடந்தது என்பதை காப்புறுதி
கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கவேண்டுமா?

உங்களுக்கு பிடித்த வாகன உற்பத்தியாளர்களிடமே
வாகனத்தை திருத்தவேண்டுமா,

உங்களுக்கு ஏற்பட்ட வீண் செலவீனங்களை,
மீளப் பெற்றுத் தர வேண்டுமா,

அனைத்தையும் இலவசமாக எவ்வித முகவர் கட்டணம்
இல்லாமல் பெற்றுக் கொடுக்கும் ஒரே நிறுவனம்

**Call us now**

**142, Pinner Road, Harrow HA1 4JE**
**Tel: 08002321523 / 020 8427 4060**
**Fax: 0845 8710197**
E-mail: info@accidentcourtesyltd.co.uk

- No excess to pay
- 100% Injury Compensation

# "யாவையுமாய் அல்லையுமாம்"

அநுராதா

ஒரு ஊரிலே ஒரு பழைய சிவன்கோயில். அங்கே சில பெண்கள் வழிபாட்டுக்குப் போனார்கள். அந்தக் கோயிலில் இருந்த சிவாசாரியார் மிகுந்த பத்தியுடன் அபிஷேகம் செய்தார். பின்னர் சுவாமிக்கு அலங்காரம் செய்யும்வரை அந்தப் பெண்களை திருமுறைகளைப் பாடச்சொன்னார்.

பெண்களில் ஒருவர்: என்ன பாட்டு பாடலாம் ஐயா?

குருக்கள்: திருமுறை பாடலாமே!

பெண்களில் மற்றொருவர்: திருமுறை என்றால் என்ன?

குருக்கள்: நாயன்மார்கள், அருளாளர்கள் பாடிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற பன்னிரண்டு திருமுறைகளில் அமைந்த திருப்பாடல்கள்.

பெண்களில் ஒருவர்: கோயிலிலே புத்தகம் இருக்கா? எங்களுக்குத் தேவாரம் அவ்வளவு தெரியாது. பஜனைப் பாடல் என்றால் தெரியும்.

குருக்கள் ஒரு திருவாசகப் புத்தகத்தை எடுத்துக்கொண்டுவந்து கொடுக்கிறார். அவர்கள் அந்தப் புத்தகத்தைத் திறந்து முதற் பக்கத்தைப் பார்க்கிறார்கள். அங்கே சிவபுராணம் என்ற தலைப்பில் 'நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!' என்ற வரிகள் கண்ணிற் படுகின்றன.

பெண்களில் ஒருவர்: இதென்ன ஐயா! இது செத்தவீட்டிலே பாடும் பாட்டு. கோயிலிலே பாடலாமா?

குருக்கள் தம்முடைய தலையைச் சுவரிலே மோதாத குறையாக, தம்முடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு.........

குருக்கள்: அம்மா! இது திருவாசகம். மாணிக்கவாசகர் என்று ஒரு அருளாளர் பாடியது. சிவன்மேலேதான் பாடியிருக்கிறார். இதைத் தினமும் காலையும் மாலையும் பாராயணம் செய்துவந்தால் நம்முடைய மனக் கஷ்டங்கள் நீங்கும் மனம் நிம்மதி அடையும் என்று படித்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மரணச் சடங்கிலே மன அமைதி இன்றித் தவிக்கும் உற வினர்களுக்கு மன அமைதியைக் கொடுக்கும் என்பதாலும் இறந்த ஆன்மா நல்ல திருவாசகத்தைக் கேட்டு உய்தி பெறும் என்பதாலும் மரணச்சடங்குகளிலே பாடும் வழக்கம் வந்திருக்கலாம். அதனால் இதைத் தயவுசெய்து செத்தவீட்டுப் பாட்டென்று சொல்லாதீர்கள்.

குருக்களின் பதிலால் ஓரளவு சமாதானமடைந்த பெண்கள் தரையில் அமர்ந்து சிவபுராணம் பாடுகிறார்கள்.

**'அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்'** என்ற வரி வந்ததும் முன்பே பலமுறை பாடிய வரிகள் என்பதாலும் முன்பே பலமுறை பிழையாகவே பாடிப் பழகிவிட்டதாலும் அவர்கள் 'யாவையு**மாம்** அல்லையுமா**ம்**' என்று பாடுகிறார்கள்.

சுவாமிக்கு அலங்காரம் செய்துகொண்டிருந்த குருக்கள் மீண்டும் நிலை குலைகிறார். வெளியே

வருகிறார்.
குருக்கள்: அம்மா! அது யாவையுமாய் அல்லையுமாம் என்று பாடவேண்டும், யாவையுமாம் அல்ல யாவையுமாய் என்று 'ய்' இல் அழுத்தம் கொடுக்கிறார்.

பெண்களில் ஒருவர்: ஆனால் நாங்கள் பலகாலமாய் யாவையுமாம் அல்லையுமாம் என்றுதானே பாடிவருகிறோம்?

குருக்கள்: நீங்கள் இவ்வளவு காலமும் எப்படிப் பாடினீர்கள் என்பதல்ல. இனியாவது திருத்திப் பாட முயலவேண்டும் என்பது என் ஆசை. இறைவன் யாவையுமாய் இருக்கிறான் அவை அல்லாததாயும் இருக்கிறான் என்பது பொருள். உதாரணமாக, இறைவன் நீராகவும் இருப்பான். நெருப்பாகவும் இருப்பான். ஆனால் சூடு, குளிர் என்ற தன்மை அவனுக்கு இல்லை.

பெண்கள்: சரி ஐயா! நாங்கள் இன்றிலிருந்து யாவையுமாய் அல்லையுமாம் என்றே பாடுகிறோம் என்று சொல்லி 'ய்'இல் அழுத்தம் கொடுக்கிறார்கள்.

**சிவபுராணம் பாடுவதால் மனம் அமைதிபெறும்; வீட்டிலே செல்வம் நிறையும்**


# ஆங்கிலத்தில் தமிழ் வெண்பா

**வெண்பா என்ற இனக் கவிதை புனைவதற்கு மிகவும் கடினமானது. தற்காலத்திலுள்ள புதுக்கவிதை போல வெண்பாவை எழுதிவிடமுடியாது. 'வெண்பாவில் புகழேந்தி' என்று சொல்வது வழக்கம். சில புலவர்கள் தற்காலத்தில் வெண்பா என்று தலைப்புப் போட்டு கவிதைகள் எழுதுகிறார்கள். அவற்றில் கலித்தளை வயலிலுள்ள களைபோல நிறைந்திருக்கும். அத்தகைய கவிதைகளை வெண்பா என்று சொல்ல முடியாது.**
**தமிழிலேயே வெண்பா பாடுவது கடினமாக இருக்கும்போது பாவலர் ஒருவர் தமிழ் இலக்கணத்துக்கு அமைய ஆங்கிலத்தில் ஒரு வெண்பா எழுதியிருக்கிறார். புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் கேடுகள் பற்றிய கவிதை அது. அந்தக் கவிதையைப் புனைந்த பாவலர், நூற்றாண்டு கண்ட தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள்.**
**இனி அக் கவிதையைச் சுவைப்போம்.**


**Eyes will be spoilt activities destroyed**
**Yea! truly all powers impaired - by daily**
**Smoking or chewing snuffing or in any way**
**Making use of tobac co.**

**ஆங்கிலத்தில் வார்த்தைகளுக்கு நடுவில் இடைவெளி வரவேண்டும் என்பதால் சீர்களுக்கு நடுவில் பெரிய இடைவெளியும் சொல் நடுவில் ஓர் இடைவெளியும் விடப்பட்டுள்ளது.**

# பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு நிறைவு விழா 16.01.2011













நிகழ்ச்சியில் உரையாற்றிய
சிவஸ்ரீ வசந்தன் குருக்கள் அவர்களும்
உரைச்சித்திரம் வழங்கிய
நால்வர் தமிழ்க் கலைநிலைய
மாணவர்களும்







காரைக்கால் அம்மையார்
குருபூசையில் இலங்கையில்
இருந்து வந்த
திரு. சோ. பத்மநாதன் அவர்கள்
உரையாற்றினார்
படங்கள் எதிர்ப்பக்கத்தில்

# நடராஜர் அபிஷேகம் 16.02.2011











# காரைக்கால் அம்மையார் குருபூசை 22.03.2011









சைவ சமயம் மிகப் பரந்த சமயம். தமிழர்களாகிய நாம் மட்டும் எமக்கு உரித்தான சமயம் என்று முடிவுகட்ட முடியாது. சைவ சமயத்துக்கு உரிய முதல் நூல்கள் எவையென்று கேட்டால் உடனே நாம் திருமுறைகளும் சைவ சித்தாந்தமும் என்று கூறுகிறோம். இவை சைவத் தமிழர்க்குரிய துணை நூல்கள். முதல் நூல் எது என்றால் வேதமென்பதே சரியானதாகும். 'வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்' என்று திருமூலர் குறிப்பிட்டுள்ளார். இதில் வேதம் பொது என்றார். ஆகமம் சிறப்பு என்று வகுத்துக் காட்டினார். வேதம் துதி நூலாகவும் ஆகமம் விதிநூலாகவும் சொல்லப்படுகிறது.

வேதம் பொது என்பதன் காரணம் என்ன? சைவ சமயத்தைச் சார்ந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம், குஜராத்தி, ஹிந்தி போன்ற பல மொழியினைச் சார்ந்த மக்களிடம் சைவத்தின்

# ஆலய வழிபாடும் வேதாகம நெறியும்

**சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா வசந்தன் குருக்கள்**
**கற்பக விநாயகர் கோயில் வால்தம்ரோ**

முதல் நூல் எது என்று கேட்டால் அவர்கள் வேதம் என்றே சொல்வார்கள். ஏனெனில் இது இறைவனால் அருளப்பட்டது என்ற ஒரே காரணந்தான். தமிழர்களாகிய எங்களிற் சிலருக்கு இருக்கும் வடமொழி மீதுள்ள துவேஷத்தின் காரணமாக, வேதமே முதல் நூல் என்று தெரிந்தும் அதைச் சொல்ல மனமில்லாமல் இருக்கிறோம். சைவத் திருமுறைகளையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் நன்கு உணர்ந்த அறிஞர்கள் பலர் ஏற்கும்போது, அவற்றைப் படித்த சிலர் இந்நூல்கள் போற்றும் வேதங்களை ஏன் வெறுத்து ஒதுக்குகிறார்கள் என்பது பரியாத புதிராக உள்ளது.
புரியாத மொழி, விளங்காத மொழி என்று வடமொழியை கூறுவதைவிட, இது இறைவனால் அருளப்பட்டது என்று நம்பினால் மட்டும் போதும். வடமொழி புரியாத மொழி அல்ல. நல்ல இலக்கணம் உள்ள மொழி. பல இலக்கியங்களும் நீதி சாஸ்திரங்களும் நிறைய உள்ள மொழி. ஆசியாவிலும் மேற்கு நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களிலும் ஒரு பாடமாகவே சமஸ்கிருதம் உள்ளது. அதனால் இதை இறந்துபோன மொழியென்று முடிவுகட்டி நாம் நமது சமய நூலை இழந்துவிடக்கூடாது. யாரும் இம்மொழியைக் கற்கலாம்; கற்பிக்கிறார்கள். ஆனால் இவற்றை ஓதுவதற்கு சில விதிமுறைகளை ஆகமத்தில் இறைவன் வகுத்துள்ளார். இதனால் ஆகமம் சிறப்பு என்று திருமந்திரம் கூறுகிறது. ஆகமம் பொதுநூலாக இருப்பதால் வேறு வேறு மொழி பேசும் மக்களிடையும் ஆகம விதிகள் ஒன்றாகவே உள்ளன. இருபத்தெட்டு ஆகமங்களும் உப ஆகமங்களும் நடைமுறையில் உள்ளதே இதற்குக் காரணம்.

வேதங்களை மொழிபெயர்த்த ஜேர்மனிய அறிஞர் மார்க்ஸ் முல்லர் நான்கு வேதங்களும் நல்ல வாழ்வியல் அறிவியல் நூல் எனக் குறிப்பிட்டுள்ளார். வேதம் என்ற சொல் 'வித்' என்ற வடமொழி வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது. வித் என்றால் அறிவு என்பதே கருத்தாகும். வேதம் என்றால் அறிவு நூல் என்றே பொருள்படும். எனவே, ஒரு அறிவு நூலை, இறைவனால் அருளப்பட்ட நூலை, மேலை நாட்டு அறிஞர்களும் வியந்து பாராட்டி மொழிபெயர்த்த நமக்குரிய நூலை நாம் ஒதுக்கலாமா?

இருபத்தெட்டு ஆகமங்களில் காரணம், காமிகம் ஆகிய ஆகமங்களே இந்தியா, இலங்கை, சைவத் தமிழர் வாழும் வெளி நாடுகள் ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களிற் பின்பற்றப்

படுகின்றன. இருபத்தெட்டு ஆகமங்களில் திருமூலர் நாயனார் ஒன்பது ஆகமங்களைத் தெரிவு செய்து அவற்றுள்ளும் காரணம், காமிகத்தை முதன்மைப்படுத்தியுள்ளமை கவனிக்கத் தக்கதாகும். 'பெற்றநல் காரணம் காமிகம்' என இப்பாடல் கூறுகிறது. இதன் அடிப் படையிலேயே ஆகம முறையில் அமைந்த ஆலயங்களில் நடக்கும் வழிபாடுகளில் வேதம் ஓதும் முறையும் ஆகமநடைமுறையும் பின்பற்றப்படுகின்றன. வேதம் படிப்பது வேறு. வேதத்தை ஓதுவது வேறு. திருமுறைகளைப் படிப்பது வேறு, திருமுறைகளை ஓதுவது வேறு என்பது எல்லோருக்கும் தெரியும். வேதத்தையும் திருமுறையையும் முறைப்படி ஓத வல்லாரைக் கொண்டே ஓதவேண்டும் என்று நியதி இருக்கிறது.

ஆலய வழிபாட்டில் ஏன் அந்தணர், பார்ப்பனர், வேதியர், மறையோர், சிவாசாரியர் என்று கூறப்படுகின்றவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்? ஏன் வேதாகமங்களை வழிபாட்டிலே பயன்படுத்தவேண்டும்? விடைகளை இனித் தேடுவோம்.

*****


ஒருவர்: எங்கே அவசரமாக ஓடுகிறீர்?

மற்றவர்: இங்கிலிஷ் படிக்க.

ஒருவர்: என்ன திடீரென்று ஆங்கிலமோகம்? உபமன்யு முனிவர் சிவனைத் தவிர வேறு தெய்வம் எதையும் கும்பிடாதமாதிரி தமிழைவிட வேறு ஒரு மொழியையும் பேசமாட்டீரே!

மற்றவர்: இப்ப இங்கிலிஷ் படிக்காவிட்டால் என்னென்ன 'பெனிபிட்' எடுக்கலாமென்று அறியமுடியாது. ஒருதரும் சொல்லித் தாறாங்களில்லை, நானே தெரிந்து கொண்டால்......!!

ஒருவர்: அப்ப கோயிலுக்கும் சமஸ்கிருதத்தைப் படித்துவிட்டுப் போகலாந்தானே! ஏன் தமிழ்ப் பூசை வேண்டும் என்கிறீர்?



**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

# கலசம்
**KALASAM**

இலவச காலாண்டிதழ்

## கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :..........................................................................................

முகவரி :......................................................................................

...................................................................................................

...................................................................................................

...................................................................................................

Donation: £.................

Postage: £.................

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)


SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com


0845 470 1500
உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பிற்கு
உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்
Protect the one thing
That's important to you
Your family.
Select
Life Care
Death Benefits
Critical illness benefits
Death or earlier critical illness benefits
Unemployment benefits
Disability income benefits
Level term assurance
Decreasing term assurance for mortgages
Select life care is an introducer to Select Mortgage Solution. Select Mortgage Solution is directly authorised and regulated by the financial services authority.
www.select.gb.com
Design & Print 07983 659 167
cartecgraphics.co.uk

# துறவிக்கு உயர்வேது? தாழ்வேது?

திரு மு வைரமுத்து

**2011 ஏப்பிரல் மாதம் 13ஆம் திகதி யோக சுவாமி அவர்களின் குருபூசைத் தினமாகும். ஒரு சிறந்த சித்தராக இருந்தும் சித்து விளையாட்டுச் செய்யும் அந்த வழி ஆன்ம ஈடேற்றத்துக்கு உகந்ததல்ல என்று ஒதுக்கியவர் அவர். அவரின் குருபூசையை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

**யோ**கர் சுவாமிகளுக்குப் பெரியார் சிறியார் என்ற பாகுபாடில்லை. சாதி, மத பேதமில்லை. யாரை எந்த நேரத்தில் எப்படி வரவேற்பார் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. அஃது ஒரு மர்மம். ஒருவரை வாவென்று ஏற்பதும் இப்போ சந்தர்ப்பமில்லை, போய்வா என்று இன்னொருவரை வெளியேற்றுவதும் சுவாமிக ளின் அவ்வப்போதைய மனோநிலையைப் பொறுத்திருக்கலாம். நாட்டில் மிகப்பெரிய பதவியையும் செல்வாக்கையும் உடையவர் களையுஞ் சரி, மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள ஏழை மக்களையுஞ் சரி சுவாமிகளின் ஆசிரமத்தில் காணலாம். சில நேரங்களில் இவ்விரு சாரரையும் ஒரு பாகுபாடும் காட்டாது கலைத்து விடுவதுமுண்டு. மற்றவர்களிலும் பார்க்க சுவாமி எம்முடன் கூடப்பற்றுள்ளவர் என்றெண்ணித் தங்கள் சிறுமையினால் இறுமாப்புக் கொண்டுள்ளவர்களுக்கும், தத்தம் சுயநலத்திற்காக அவரைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் வருபவர்களுக்கும், சில நேரங்களில் பாடம் படிப்பிக்கும் முறையையும் கவனிக்கத்தக்கதாயிருந்தது.

ஒரு நாள் மலைநாட்டில் வசிக்கும் ஒரு சீமான் சுவாமிகளிடம் வந்தார். படித்தவர்; செல்வந்தர், தன்னை உயர்ந்தவராகக் கருதியோ என்னவோ தெரியாது, எல்லோருடனும் கந்து அளவளாவு பவர் அல்லர். இருந்தும், முன்னரும் பல முறை சுவாமியைத் தரிசித்துச் சென்றவர். சுவாமியும் அவர் இல்லத்திற்கு இடையிடையே போய் சில நாள்கள் தங்கியும் வந்ததுண்டு. இம்முறை அந்தப் பெரியவரும் மனைவியும் மலை நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வந்து ஏராளமான காணிக்கைப் பொருள்களையும் வெள்ளித் தட்டங்களில் ஏந்திக்கொண்டு சுவாமிகளின் கொட்டிலுக்குள் உத்தரவையும் காத்திராது, நேரே உட்புகுந்து, தாங்கள் கொண்டு வந்த பொருள்களைச் சுவாமிகளின் சந்நிதானத்தில் வைத்தார்கள். குனிந்து பொருள்களை வைத்தவர் நிமிருமுன்: “எடு இங்கு ஒன்றும் தேவையில்லை, திருப்பிக்கொண்டு போய் விடலாம், எனக்கு இப்போ நேரமில்லை. என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள், எடு என்றால் எடு!” என்று கோபக்குரலில் உறுக்கினார் சுவாமி. வந்தவர்கள் இந்த மாதிரியான ஒரு வரவேற்பை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்பது அவர்களின் முகங்களில் தெரிந்தது. அவர்களால் வாய்திறந்து ஒன்றும் பேசவும் முடியவில்லை. நடுங்கிவிட்டார்கள். கொண்டு வந்த பொருள்களையும் தூக்கிக்கொண்டு மௌனமாகத் திரும்பி விட்டார்கள். பார்த்துக்கொண்டிருந்த எங்களுக்கு மிகவும் பரிதாபமாயிருந்தது.

அவர்கள் போனபின் சுவாமி சிரித்தார். சிரித்துக்கொண்டே, ‘மகளுக்குக் கல்யாணம் பேசட்டாம் என்னை, பேசிய மாப்பிள்ளை சம்மதிக்கிறார் இல்லையாம். அவரின் மனத்தை என்னால் மாற்ற முடியுமாம். நல்ல வேலை எனக்குக் கொண்டு வந்தார்கள். அன்றொரு நாள் ஒரு ஏழை மனிதன் தன் பிள்ளைக்குக் கலியாணம் ஆகுதில்லையே என்று வந்து முறையிட்டான். பரிதாபமாயிருந்தது. இப்போ பேசுகிற மாப்பிள்ளைக்குச் சொல்லு என்னை வந்து காணும்படி என்று சொல்லி விட்டேன். அந்தக் கலியாணம் சரிவந்து விட்டது. அந்த ஏழை மனிதனும் தப்பி விட்டான். இதைக்

கேள்விப்பட்டார்கள் இவர்கள். நான் கலியாணத் தரகரென்று நினைத்து விட்டார்கள். அவர்கள் கொண்டு வந்த சாமான்களைப் பார்க்கவில்லையா? படித்த மோடர்' என்று சொல்லி முடித்தார் சுவாமி. அப்போதான் விஷயம் எங்களுக்கு விளங்கியது. ஒரு மகானைத் தரிசிக்க வரும்பொழுது எப்படி வரக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தது, அன்று அவர்கள் வருகை. எங்களுக்கோ அ்.து ஒரு மறக்கமுடியாத சிறந்த படிப்பினையாய் அமைந்தது.

இதற்கு முற்றிலும் மாறான இன்னொரு சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு நாள் நண்பகல் பன்னிரண்டு மணியிருக்கும், சுவாமிக ளின் சந்நிதானத்தில் சிலர் இருக்கும் போது எங்கோ ஒரு தூரக்கிராமத்திலிருந்து ஒரு வயது சென்ற பெண்மணி அங்கு வந்தாள். ஏழைக்குடும்பத்துப் பெண்போலத் தோன்றியது. வரும்போது, ஒரு பெரிய பலாப்பழத்தைத் தன் தலைமேற் சுமந்து கொண்டு வந்து சுவாமியின் முன் இறக்கி வைத்துவிட்டு வந்த களைப்புத் தோன்ற "அப்பாடி" என்று பெருமூச்சு விட்டுச் சுவாமிகளின் முன் உட்கார்ந்தாள். இதை யெல்லாம் ஒன்றும் பேசாது பார்த்துக் கொண்டிருந்து சுவாமி பெண்மணியை நோக்கி "இஞ்சாய்! உனக்கென்ன பயித்தியமா? இந்த வெய்யிலுக்கை, இவ்வளவு தூரம் நடந்து, இந்தப் பெரிய பலாப்பழத்தையும் கொண்டு வந்த நீ?" என்றார்.


"அது நானெல்லோ காவிக்கொண்டு வந்தது. நீ ஏன் போட்டடிக்கிறாய்? என்ரை ஆசைக்கு நான் கொண்டு வந்தேன். அதுக்கு உனக்கென்ன? நீ ஒன்றும் எனக்குத் தரவேண்டாம். நான் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு ஆறிக்கொண்டு போகி றேன்" என்றாள் வஞ்சகம் சூது வாது யாதும் தெரியாத அந்தக் கிராமியப் பெண்.. சுவாமி தன் வாயிலே கையை வைத்துப் பரிவுடன் அவளைப் பார்த்து "நீ நல்லாய் இருந் திட்டுப் போ" என்று கூறிவிட்டு, எங்களைப் பார்த்து "பார்த்தீர்களா, இந்தமனுஷி என் வாயை அடக்கி விட்டதை. அது தன் தலைவிதியால் கஷ்டப்படுகிறது. அதற்கு நான் என்ன செய்வது? நான் குறை சொன்னது பிழை தானே." என்றார். அந்தப் பெண்மணியின் களங்கமற்ற உள்ளத்தை வியந்து கொண்டே சுவாமி தன்முன் இருந்த தோடம்பழம் ஒன்றை எடுத்துப் பரிவுடன் கொடுத்து, "இந்தாணை நீ போய் நல்லாய் இரு" என்று ஆசீர்வதித்தார்.

சிறிது நேரத்தின் பின் அந்தப் பெண்மணி எழுந்து "நான் அப்ப போட்டு வாறேன், நெடுநாள் எடுத்த பயணம் இன்று தான் கைகூடியது. நீ மகாராசாவாய் இரு. நான் வாறேன்" என்று முணுமுணுத்துக் கொண்டு வெளியேறினாள்.

மேலே குறிப்பிட்ட இரு சம்பவங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது

**"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றுமறி வில்லாதவென் கர்மத்தையென் சொல்லுவேன் மதியையென் சொல்லுவேன்"**

என்ற தாயுமானசுவாமிகள் புலம்பல் ஞாபகத்துக்கு வருகிறது. படிப்பிலோ செல்வாக்கிலோ பண்பாடு தங்கியிருக்க வில்லை என்பது இதனால் வெளிப்ப டையாகின்றது. அல்லவா?



**நன்றி: சித்த யோகசுவாமிகள் - கனடா சைவ சித்தாந்த மன்றம்.**

உ
Love is God
**LONDON SIVAN KOVIL TRUST**
**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk

## இலண்டன் திருவருள்மிகு ஸ்ரீசிவன் திருக்கோயில்
# மஹா கும்பாபிஷேக விழா விஞ்ஞாபனம்

**சிவனடியார்களே!**

அண்ட சராசரங்கள் அனைத்தையும் பஞ்சகிர்த்தியங்கள் மூலம் அருளாட்சி புரியும் பரம்பொருளாகிய சிவபெருமான் சிறப்புறு இலண்டன் லூயிஷம் பதியில் சிவபுரம் என்னும் தெய்வீக நாமமுடைய புண்ணிய ஷேத்திரத்தில் ஸ்ரீ அபிதகுஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரர் என்னும் திவ்விய திருநாமம் தாங்கி ஆன்மாக்கள் புரியும் வழிபாட்டினை ஏற்று சகலவரங்களையும் அருளி சர்வ சுந்தர மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். பரம்பொருளாகிய எம்பெருமானது திருவருளினால் இறைவனுக்கு ஆகமரீதியில் கருங்கல்லினால் ஆலயம் அமைக்கப் பெற்று, பரிவாரமூர்த்திகள், ராஜகோபுரம் சகிதமாக சர்வமங்களகரமான கரவருஷம் வைகாசி மாதம் 29ம் நாள் 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கை கூட்டியுள்ளது. அத்துடன் அதற்கு முன்பாக சித்திரை மாதம் 5ம் நாள் 18.04.2011 திங்கட்கிழமை தொடக்கம் 04.06.2011 சனிக்கிழமை வரையும் உள்ள 48 நாட்களுக்கு விசேஷயந்திரபூஜையும், 12.06.2011 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 29.07.2011 வெள்ளிக்கிழமை வரையும் உள்ள 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. எனவே இவ்வாறு நடைபெறவிருக்கும் தெய்வீக நிகழ்வுகளைச் சகல பக்தப் பெருமக்களுக்கும் தெரிவிப்பதுடன், எல்லாமக்களும் எல்லாப் பூஜைநிகழ்வுகளிலும் பங்குபற்றி எம்பிரான் ஸ்ரீ அருணாசலப் பெருமானது திருவருளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"சிவாலயம் வருக! சிவனருள் பெறுக"

இங்ஙனம்
அறங்காவலர் சபை

# இமயம்

பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் டாக்டர் கதிர்காமநாதன்

**"இமாலயப் பயண அனுபவங்கள் சத்தியமானவை; அதனால் நித்தியமாவை" -பரணிதரன்**

உலகிலே உயர்ந்த மலை இமயமலை. மலைகளின் ராஜா- பருவதராஜா என அழைப்பர். இமயம் என்பதற்கு பனி என்ற பொருள் சமஸ்கிருத மொழியிலுண்டு. ஹிமாலயம் =ஹிம +ஆலயம்- பனி +வீடு. ஆகவே ஒப்பற்ற பனிவீடாக இமயமலை விளங்குகிறது.

இந்தியாவின் வடக்கு எல்லையாக அமைந்த இமயமலைத் தொடர் சீனா, பூட்டான், நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஊடாக உளது. இம்மலையில் பச்சைப்பசேல் என்ற புல்வெளியும், பூக்களும், மலர்களும், வாவிகளும், பள்ளத்தாக்குகளும் உள. அத்துடன் அடர்த்தியான, பசுமையான மரங்களும், மூலிகைகளும், காய், கனிகளும் வனவிலங்குகளும் இருக்கின்றன. பார்க்க பரவசமூட்டும் நீர் வீழ்ச்சிகளும், நதிகளும் சுடுநீர் வீழ்ச்சிகளும் நிறைந்துள்ளன.

இமயமலை என்றவுடன் சிவபெருமான்தான் எமது மனக்கண்முன் தோன்றுகிறார். பின்னர் ஒரு பயபக்தி உண்டாகிறது. ஏனெனில் முற்காலத்தில் இமயமலை சென்றவர்கள் திரும்பி வந்ததில்லை. இங்கு மகா முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் சித்தர்களும் வாசம் செய்கின்றனர். இவர்கள், மூலிகைகளின் வாசனை கூடிய சுத்தமான காற்று இருப்பதால் பிராணாயாமத்திற்கு (மூச்சு விடும் அப்பியாசம்-யோகாசனத்தில்) இமயமலையை நாடுகின்றார்கள்.

அரன் (சிவன்) இமயமலையை வில்லாகப் பாவித்து, திரிபுரத்தை எரித்தார். இம்மலையின் அரசன் இமவான். அவனின் மகள்தான் பார்வதி, இமயவல்லி. மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகத்திற்கு ஏற்ற ஏணிபோல் இருக்கும் இமயமலையைப் பார்த்தால் திருநீறு பூசிய நெற்றியை போன்றிருக்கும். இத் திருநீறு போன்ற பனி உருகி நதிகளாக உருவெடுக்கின்றது. கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா, ஐராவதி போன்ற நதிகள் இங்கு ஆரம்பிக்கின்றன.



இந்து தர்மத்தில் ஆறுமாதாக்கள்

| | |
|---|---|
| பெற்றதாய் | - ஜகன் மாதா |
| பராசக்தி | - பாரத மாதா |
| காயத்ரி | - வேத மாதா |
| பசு | - கோமாதா |
| கங்கை | - கங்கா மாதா |

கங்கை நதிக்கு மட்டும், நதிகளில் தாய் ஸ்தானம். காசியில், அநுமான் காட்டில், கங்கையோடு வாழ்ந்த பாரதியார் "இன்னறு நீர்க்கங்கை ஆறு எங்கள் ஆறே, இங்கதன் மாண்பிற்கு எதிர் ஏது வேறே" எனப் பாடினர்.

**கங்கோத்திரி**

கங்கா மாதாவின் புனித கோயில்தான் கங்கோத்திரி. கங்கை கோமுக் அல்லது கோமுகம்-பசுமாட்டின் வாய் போன்ற இடத்தில் பனியுருகி பாகீரதியாக பிறக்கிறது. 12 மைல்கள் தூரம் ஓடி, கங்கோத்திரியில் வடக்குமுகமாக துள்ளி, இரைந்து, கற்களை உருட்டி, உறுமி பாயுமிடத்தில் கோயில் இருக்கிறது. இது ஏறக்குறைய 10,000 அடி கடல் மட்டத்தின் மேல் அமைந்து, தரையிலிருந்து பாதைமூலம் 150மைல் தூரத்தில் உளது.

இக்கோயில் ஆறு மாத காலம் உறை பனியால் மூழ்கி மூடப்பட்டிருக்கும். இதனால் வைகாசி முதல் ஐப்பசி மாதம் மட்டும் தரிசிக்கலாம். இதைவிட அடிக்கடி மலைச்சரிவுகள் நிகழ்வதாலும், கற்பாறைகள் பாதையில் விழுவதாலும், வனவிலங்குகள் உலவுவதாலும், வளைந்து வளைந்து செல்லும் குறுகிய பாதை என்பதாலும், பகலிலேதான் பிரயாணம் செய்யலாம்.

**பயணம்:** ரிஷிகேசம் எனும் இமயமலை அடிவாரத்தில் இருந்து தான் பிரயாணம் ஆரம்பித்தல் வேண்டும். இரவு இங்கு தங்கி, மதிய உணவின் பின்னர் புரட்டாதி மாதத்தில் தொடங்கினோம். இமயமலை ஏறக்கூடிய வாகனத்தில் தான் செல்லல் வேண்டும். ஆங்கிலம் தெரிந்த சிங் என்ற சாரதியோடும், மனைவியாரோடும் சென்றேன்.

"இது இமாலய பிரதேசம்" என்ற அறிவிப்பை கண்டபின் என் மனதில் ஏற்பட்ட உணர்ச்சிகளை விவரிக்க முடியாது. சான்றோரும், முனிவர்களும், ஞானிகளும் சென்ற இடத்திற்கு நாமும் செல்கிறோம் என்ற உணர்வு எழுந்தது. பக்தி நிலையும், பக்குவ நிலையும், பயநிலையும் ஏற்பட்டது. சிறிது தூரம் சென்றவுடன் அதல பாதாளத்தில் கங்கை ஓடினாள். புகார் மறைத்ததால் பார்க்க முடியவில்லை. தவறி விழுந்தால் இறுதிக்கிரியைக்கும் எலும்பு கிடையாது. குண்டும் குழியுமாய், குறுகிய தார் பாதையில் வளைந்து வளைந்து வாகனம் மெல்ல மெல்ல சென்றது. எதிர்வரும் வாகனத்திற்கு சில இடங்களில் நின்று இடம் கொடுத்து தான் செல்ல வேண்டும்.

**உத்தரகாசி:** புராண காலத்திலிருந்து புகழ் பெற்றது. இங்கு தான் சிவபெருமான் வேடனாக வந்து அர்சுனனோடு சமர் செய்தது. அர்ச்சுனன் தபம் செய்ததும் பாசுபதாஸ்திரம் அரனிடமிருந்து பெற்றதும் இங்கே. உத்தர - வடக்கு - வடக்கு காசி. இங்கும் காசியை போன்று பகீரதி வடக்கு நோக்கி சென்று சற்று கிழக்கே செல்கிறது. இதனால் யாத்திரிகர்கள் இவ்விடங்களில் கூடுவர். கங்கை(பகீரதி) வடக்கு நோக்கி பாய்வதால் உத்திரவாகினி என்று அழைக்கப்படுகிறது.

கடல் மட்டத்திற்கு 4000 அடி மேல் இருக்கும் உத்தரகாசியை இருளும்போது அடைந்தோம். ஹொட்டலில் நாங்கள் மட்டுமே தங்கினோம். இங்கு நல்ல அநுபவம். மூன்று வேலைக்காரர்கள் எங்களை பார்த்து முழித்தார்கள். பிரயாண களைப்பாலும் பள்ளத்தாக்கு பார்த்த பீதியாலுமோ தெரியாது, எமக்கு ஒரே பசி. ஆனால் நாங்கள் வந்து சேருவோமோ இல்லையோ என்று நினைத்தார்கள் போலும். எவ்வித உணவும் ஏற்பாடும் இல்லை. கார் சாரதி அவர்களோடு பேசிய பின்னர் தான் அரிசி, பருப்பு, வெண்டைக்காய், தங்காளிகாய் போன்றவைகளை வாங்கிச் சமைத்தனர். பசிக்கொடுமையால் நாம் சமையலறைக்குள் செல்வதும் திரும்புவதுமாக இருந்தோம். ஒருவாறு இரவு போசனம் தயாரானதும் இமயமலையில் உற்பத்தியான வெண்டைக்காய் கறியும் தக்காளி குழம்பும், பருப்புக்கறியும் பப்படமும் தேவாமிருதமாகவிருந்தது.

இரவு படுக்கும் போது ஒரே வண்டுகளின் ரீங்காரமும், நதியின் இரைச்சலும் சேர்ந்து எமை தாலாட்டின. அதிகாலை 6 மணிபோல் எழுந்தோம். சூரியன் எமக்கு முன்னரே எழுந்து விட்டான். இருந்த இடத்திற்கு எதிரே பகீரதி இரைந்து செறித்து ஓடிக்கொண்டிருந்தது. சிறு அருவிகளையும் கண்டோம். அருகில் இருந்த பசுமையான விசாலமான மரங்களையும் பூச்செடிகளையும் சூழ்ந்த

மலைகளையும் ரசிக்க, அநுபவிக்கத் தவறவில்லை.
காலை 8:30மணிக்கு மீண்டும் பிரயாணம். இனி பாதை கடினம்-செங்குத்தாக இருக்கும் ஆதலால் இன்னும் மெதுவாக, கவனமாக செல்லல் வேண்டும் என வாகன 'இறைவர்' அறிவித்தார். செல்லும் வழியில் நீர் வீழ்ச்சி ஒன்றைக் கண்டோம். உடனே வண்டியை நிறுத்தி அருகில் சென்று பார்த்தோம். இச்சிறு நீர்வீழ்ச்சி தெருவின் அருகில் வீழ்ந்து 'கொட கொட' என சப்தமிட்டது. சிலர் குளித்தனர்; சிலர் உடைகளைத் தோய்த்தனர். சூழல் மிக ரம்யமான விருந்து-வீழ்ச்சியை பார்த்ததும் உற்சாகமாகவிருந்தது.

**சுடுநீர்:** பின்னர் ஒரு சிவன் கோயிலுக்குச் சென்றோம். அக்கோயில் சுடுநீர் வீழ்ச்சிக்கு அருகில் இருந்தது. சுடுநீர் சிறு அருவியை போல விழுவதும் அதனிலிருந்து ஆவி பறப்பதையும் கண்டோம். ஓடும் அந்நீரை ஒரு தொட்டியில் தேக்கி வைத்திருந்தனர். இதில் கோயில் பூசகர் குளிப்பதாகக் கூறினர். சுடு நீர் சுட்டது.

**கங்கோத்திரி:** காலை 11 மணிபோல் அடைந்தோம். தங்க ஒரு சிறு அறை கிடைத்தது. முன்கூட்டி ஏற்பாடு செய்தும் இடம் இல்லை என்று அந்த ஹொட்டல்காரர் கூறினார். அநுபவமுள்ள சிங் அவர்களோடு சிறு சப்தம் போட்டு கிடைக்க செய்தார். பின்னர் ஓய்வு எடுத்தபின் கோயிலுக்கு சென்றோம்.

**பகீரதி:** முதலில் சென்றது கோயிலுக்கு அருகில் உக்கிரமாக இரைந்து ஒலி எழுப்பி அட்டகாசமாக துள்ளி திமிறி கற்களை உறுத்தி ஆரவாரத்துடன் ஓடும் இளம் கங்கை. பகீரதியை சங்கிலியை பிடித்துக் கொண்டு ஓடும் நதியை தொட்டும் பார்த்தோம். குளிரில் ஐஸ் கட்டி தோற்றுவிடும். எனினும் சிலர் தண்ணீர் மொண்டு குளித்தனர்.

நாங்கள் இங்கு நிற்கும் போது முக்காடிட்ட கிராம பெண்கள் வந்தனர். முதலில் பகீரதியை வணங்கினர். தோத்திரங்கள் சுலோகங்கள் சேர்ந்து பாடினர். பின்னர் கரையில் விளக்குகள் ஏற்றி தொழுதனர். ஒருவர் சாம்பிராணி குச்சியால் தூபம் காட்டி பின்னர் தீபமும் காட்டினார். இறுதியில் துணி, பூக்கள், தீபம் வைத்து ஆற்றில் மிதக்கவிட்டு அஞ்சலி செய்தனர். எளிமையான மனப்பூர்வமான வழிபாடு! பகீரதி வழிபாட்டின் பின்னர் கோயிலுக்கு சென்றோம். முதலில் பிள்ளையாரையும் கௌரிசங்கரையும் வணங்கி ஆலயத்தினுள் சென்றோம். பூசகர் எமை அன்போடும் ஆதரவோடும் வரவேற்றார். மொழி தெரியாவிடினும் பொறுமையாக அங்குள்ள மகரவாகனத்தின் மீது கருணை யோடு இருக்கும் கங்காமாதாவைக் காட்டினார். மேற்கையில் கமலமும் கலசமும் கொண்டு வலது கீழ்க்கரம் அபயமாகவும் இடதுகரம் தொடையின் மீது வைத்திருக்கவும் கண்டோம். மாதாவை தவிர மகாலட்சுமி, அன்னபூரணி, சரஸ்வதி, யமுனை பகீரத ராஜா இருக்க தரிவித்தோம்.


Mount Kailash and Lake Mansarovar

கோயிலுக்கு அருகில் பகீரதிக்கு அருகில் பகீரதராஜாவின் கோயில் உளது. சிறுகோயில் தான். பகீரதப்பிரயத்தனத்தால், பகீரதியை பகிதர ராஜா கொண்டு வந்தார். இங்கு ஒரு கற்பாறையை காட்டி இதில் தான் பகீரதன் தவம் செய்தது என்றனர். இக்கோயிலில் அர்ச்சனை செய்தோம்.
இரவு கோயில் பூசைக்கு சென்றோம். முதலில் மின்

விளக்குகளை அணைத்துவிட்டு குத்துவிளக்கு சிறுவிளக்குகள் வெளிச்சத்தில் டம டமவென மேளம் அடிக்க மணியோசை நாதம் எழுப்ப பூசை. பின்னர் படிப்படியாக மின்னொளி கொடுத்து இறுதியில் பூசகர் வெளியே வந்தார். அவர் காவி சீருடையோடு உருத்திராட்ச மாலை அணிந்து பகீரதிக்கு தீப ஆரத்தி செய்தார். இருபுறமும் மேளம் அடிக்க இருவர் சாமரை வீச இது நடைபெற்றது. பின்னர் யாவருக்கும் பிரசாதம் கொடுத்தனர்.
அன்றிரவு சரியான மழை தடதட வென்று கற்கள் விழுந்தது போல் கடும் மழை! மின்சாரம் இல்லை. இரவில் எழும்பி யான் தட்டுத்தடுமாறி விழுந்துவிட்டேன். அபாயமில்லை. ஒருவாறு "டோர்ச்" எடுத்து மனைவியாரை ஆசுவாசப்படுத்தினேன்.

மறுநாள் காலை, வெள்ளிக்கிழமை. அமாவாசை தினம். கங்காமாதாவை பூசை செய்ய சென்றோம். 250/=கொடுத்து சீட்டு எடுத்தோம். 511ரூபா பூசைத்தட்டு பந்தி பந்தியாக எமை கூப்பிட்டு இச் சிறு கோயிலுள் அமர்த்தி பூசை செய்தனர். இனிமையாகவும் அற்புதமாகவும் இருந்தது.


கடைவீதி சென்று அங்கு இரு தமிழ் புத்தகங்கள் வாங்கினேன். இமயத்திற்கும் தமிழ் சென்று விட்டது என்று எண்ணி வியக்காமலில்லை.

**கங்கை:** கோமுக் அல்லது கோமுகம் எனும் பசுமாட்டின் வாய் போலிருக்கும் இடத்தில் பனிக் கட்டி உருகி பகீரதி பிறக்கிறாள். 12 மைல் கங்கோத்திரியை அடைந்து பின்னர் ஏறக்குறைய 100 மைல்கள் தாவி துள்ளி தேவபிரியாவை அடைகிறாள். இங்கு பரமசிவனின் சிரசிலிருந்து வரும் பகீரதி, விஷ்ணுவின் பாதத்திலிருந்து வரும் அகல நந்தா நதியோடு கலந்து கங்கையாகிறாள். இவ்விடம் புனிதமும் புண்ணியமுமான அத்வைத பீடமாகும்.

"நதிகளில் நான் கங்கையாயிருக்கிறேன்." - கீதையில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா.
கங்கை மேலும் 50மைல்கள் ஓடி ரிஷிகேசத்தில்-ஹரி".. மலையிலிருந்து மண்ணில் விழுகிறாள். பின்னர் கான்பூர், அகலபாத், காசி, பாட்னா சென்று மேற்கு வங்காளத்தில் கடலோடு சங்கமமா கிறாள்.

**எழுமையுடன் கூடி ஈண்டிய பாவம் இறைப்பொழுது அளவில் எல்லாம்**
**கழுவி விடும் பெருமை கங்கை. - -ஆழ்வார்-**

## மாவை சிவஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள்



யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீன கர்த்தரும் பிரதம குருவுமான சிவஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் சிவ பதம் அடைந்துவிட்டார். நாளும் முருகனுக்கு அர்ச்சனை செய்து ஆலய வளர்ச்சியிலும் சுற்றியுள்ள மக்கள் நலனிலும் அக்கறை கொண்டு உழைத்தவர் அவர். மாவை ஆதீன வெளியீடாக பல சமய அருட்பாடல் உரைநூல்கள் வெளிவரக் காரண கர்த்தாவாக இருந்தவர். கோயிலுக்குச் செல்லும் அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்று அர்ச்சனை செய்து வழியனுப்புபவர். அன்னாரின் ஆன்ம சாந்திக்கு நாம் பிரார்த்திக்கிறோம்.
நாட்டின் அநர்த்தங்களால் இடியுண்ட கோயிலைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற எண்ணம் குருக்கள் மனதில் என்றும் இருந்தது. அந்த எண்ணம் கனிய, சைவப் பெருமக்கள் அனைவரும் தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு திருப்பணியை செய்து முடிப்பதே குருக்கள் அவர்களின் ஆன்ம சாந்திக்கு செய்யும் கைம்மாறாகும்.

# வேதாகமங்கள் வாழ்க! சைவசமயம் வாழ்க!!

பண்டிதர் ஸ்ரீமத் தி கைலாசநாதக் குருக்கள்

இவ்வுலகத்திலே பல சமயங்கள் உள்ளன. அவைகளுட் தலைசிறந்தது சைவசமயமாகும். சைவ சமயத்துக்குத் தலைவர் சிவபெருமான். சிவபெருமான் ஆன்மாக்கள் மீதுள்ள கருணையினால், அவ்வான்மாக்கள் தம்மை அறிந்து வழிபட்டுய்வான்வேண்டி வேதாகமங்களைத் தோற்றுவித்தருளினார். இதை, திருமந்திரத்திலுள்ள

**வேதமொ டாகமம் மெய்யா மிறைவனூல்**
**ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன**
**நாதன் உரைஅவை.......**

என்னுஞ் செய்யுளான் அறியக்கிடக்கிறது. சித்தாந்த சாஸ்திரங்களும், தேவார திருவாசகங்களும் பிறவும் இறைவன் மெய்யடியார்களால் ஆக்கப்பட்டன. வேதாகமங்களும் அவைகளில் விதிக்கப்பட்டவைகளும் உலகந் தோன்றிய காலந்தொட்டுள்ளன. நேற்று இன்று உள்ளவைகள் அல்ல. இடையிடையே சைவசமயத்துக்கும் வேதாகமங்களுக்குந் தொல்லைகள் ஏற்பட்டன என்பது

**முந்தொரு காலத்தின் மூவுல கந்தனில்**
**வந்திடு முயிர்செய்த வல்வினை அதனால்**
**அந்தமின் மறையெலா மடிதலை தடுமாறிச்**
**சிந்திட முனிவரும் தேவரு மருளுற்றார்**

என்னுங் கந்தபுராணச் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. இன்னும் சிலசில காலங்களில் சமணர் முதலியவரால் தொல்லை வந்தபோது அடியார் வாயிலாக இறைவன் தீர்த்தருளினார். அவைகள் போன்ற ஒருகாலம் இப்பொழுதும் வந்திருக்கிறது. முற்காலங்களில் வந்த துன்பங்கள் பிறசமயங்களால் வந்தவைகளாம். இப்பொழுது பிற மதத்தவரின் சூழ்ச்சியாலே சைவசமயத்தோரால் வந்திருக்கிறது; இன்னும் வரவுமிருக்கிறது. என்றைக்குப் பிற மதத்தவன் அரசனானானோ, அன்றே சைவசமயத்துக்கு ஆபத்து வந்தது. வந்தாலும் ஆங்கிலேயரால் இதுவரையும் பெருந்துன்பம் வரவில்லை. என்றைக்குச் சுயராய்ச்சியம் வந்ததோ, அன்றே சைவசமயத்துக்கு ஏழரை தொடங்கிவிட்டது.

இப்பொழுது ஆங்கிலம் படித்தவர்களும் அற்பமாய்த் தமிழ் படித்தவர்களும் அதிகாரிகளும் பட்டதாரிகளுமாகிவிட்டனர். அவர்களே இப்போது சமயத்தை இராய்ச்சிய சம்பந்தமுறச் செய்து இராய்ச்சிய மூலமாக வேதாகமங்களுக்கு முற்றும் முரணான கொள்கைகளை நிலைநாட்டி, மக்களை இடர்ப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். வேதாகமங்கள் அவர்களுக்குக் கசப்பானவை. வேதாகம விஷயங்களைப் பழிப்பதும் அவைகளைப் பொருத்தமற்ற முறையில் வைத்துப் பொருள் சொல்லிப் பிழையானவை என்று சாதிப்பதுஞ் செய்கிறார்கள். இவர்களுக்கு சாஸ்திரங்களைத் தூஷிக்குந் தொழில் இப்போ பெருந்தொழிலாகியது.

இப்போது சனப் பிரதிநிதிகள் சமயப்பிரதிநிதிகளாகியும்விட்டார்கள். இந்தியர் சுயராய்ச்சிய மோகத்தால் தங்கள் சமயங்களையும் சமயானுட்டானங்களையும் புறத்தே வீசிவிட்டார்கள். அந்நாட்டுத் தொற்றுநோய் இங்கும் பரவிவிட்டது. தற்போது பண்டிதர், வித்துவான், புலவர் என்று சொல்லப்படுபவர்கள் வேதாகமங்கள் தமிழ்ப்பாஷையிலுள்ளவை என்றும், அவைகள் இப்பொழுது

இல்லாது அழிந்தொழிந்தனவென்றும், தற்போதுள்ள வேதாகமங்கள் வயிற்றுச் சீவியத்தின் பொருட்டு பிராமணர்களாகிய ஆரியரால் புதிதாகக் கட்டிவைக்கப்பட்டன என்றுஞ் சொல்கிறார்கள். இவ்வேதாகமங்கள் இறைவன் வாக்கல்ல என்று ஆடம்பரமாகச் சொல்லி, அறிவிலிகளாகிய மக்களைத் தம்பக்கத்திழுத்து தம் மதத்தை நிலைநாட்டத் துணிந்துகொண்டார்கள். எவ்வகையான நியாயங்களைச் சொன்னாலும் அவர்களிடம் பலிக்காது. சுயராய்ச்சியம் வந்தாற் போதும், சமயமெல்லாம் ஒன்றுந் தேவையில்லை என்கிறார்கள். ஆனால் மண்ணுலகத்தில் சுயராய்ச்சியமாக வாழ விரும்புவோர் மறு உலகத்தில் சுயராய்ச்சியமாக வாழ்வார்களா....? தெரியவில்லை.

சைவசமயத்துள்ளவர்கள் சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்று, கற்றபடி ஒழுகுவதே கடனாகும். கற்ற பண்டிதர், வித்துவான்களின் கடனும் அதுவே. படிப்பது புராணம் இடிப்பது சிவன்கோயில் என்று நடக்க இவர்கள் விரும்புகிறார்கள். சுயராய்ச்சியம் வந்ததும் புதுமுறையாக வாழ விரும்பிச் சமயசாஸ்திரங்களையும் புதுமுறையாக்க விரும்புகிறார்கள். இது இவர்கள் எண்ணப்படி நடப்பதொன்றன்று. சமய விஷயங்களை இராய்ச்சிய சம்பந்தமுறச் செய்யவேண்டும் என்று நினைப்பது பெரிய மூடத்தனமாகும். சமயசாஸ்திர ஒழுக்கங்கள் பிழைபட்ட காலங்களில் மெய்யடியார்கள் தோற்றி நல்லமுறையில் நிலைபெறச் செய்தார்களேயொழிய அவைகளை அழித்தார்களில்லை. இப்பொழுதும் படித்த பண்டிதர்கள், வித்துவான்கள் சமய சாஸ்திரங்களையும் ஒழுக்கங்களையுஞ் செப்பஞ்செய்து வைத்தலைவிட்டு பழித்தொழித்து விடுவது நல்லதல்ல.

**வேதாகமங்கள் வாழ்க!, சைவசமயம் வாழ்க!**

**நன்றி: வேதாகம நிருபணம் -**
**(அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அவர்கள் எழுதிய வேதாகம நிரூபணம் என்ற நூலுக்கு பண்டிதர் ஸ்ரீமத் கைலாசநாதக் குருக்கள் அவர்கள் எழுதிய மதிப்புரையிலிருந்து)**

பிரித்தானிய நாட்டிலே ஒரு கார் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அது ஒலி அதிர்வால் (voice activation) இயங்கக்கூடியதாகச் செய்திருக்கிறார்கள். அது Start என்றால் புறப்படும், right turn என்றால் வலப்புறம் திரும்பும். stop என்றால் நிற்கும்.

அதனுள் ஏறி இருந்து, நான் தமிழ்ப் பித்தன். ஆங்கிலம் பேசமாட்டேன். கிளம்பு என்றால் அந்தக் கார் கிளம்புமா?


தமிழிலே வேலை செய்யக்கூடியதாக எந்திரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கருவியை (voice activation chip) மாற்றி அமைத்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

அதுபோல வேதாகம முறைகளையும் அர்ச்சனை முறைகளையும் வடமொழியிலே செய்வதற்குத்தான் வழிமுறைகள் இருக்கின்றன. தமிழிலே செய்ய விரும்புபவர்கள் புதிதாக ஒரு முறையை வகுக்கவேண்டுமே தவிர இருப்பதை மாற்றுவது பலன ளிக்காது.

சுவாமி சச்சிதானந்தா 1982இல் நடத்திய உரையிலிருந்து
தகவல்: ஆ லோகநாதன்

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-



கண்ணனும் தாத்தாவும் பூங்காவைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீடு திரும்புகின்றனர். சூரிய வெளிச்சமும் சுத்தமான காற்றும் பூங்காவின் அழகும் மனசுக்குப் புதுத் தெம்பையும் உற்சாகத்தையும் தந்தது. கண்ணன் தாத்தாவுடன் பேசுவதில் ஆர்வமாக இருக்கிறான்.

கண்ணன்: தாத்தா! பூங்காவுக்கு நடந்து வந்ததால் களைத்துவிட்டீர்களோ?

தாத்தா: இல்லைக் கண்ணா! இதமான காற்று மனதுக்கும் உடம்புக்கும் உற்சாகத்தையே தந்துள்ளது. அதுமட்டுமல்ல, நீ விளையாடப் போனபின் அங்குள்ள சில பெரியவர்களுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவும் மனதுக்குச் சந் தோஷமாக உள்ளது.

கண்ணன்: அப்படியா? உங்களுக்குப் புது நண்பர்கள் கிடைத்துவிட்டார்கள் என்று சொல்லுங்கோ! எதையெல்லாம் பேசினீர்கள் தாத்தா?

தாத்தா: பல நல்ல விஷயங்கள் பற்றியெல்லாம் உரையாடினோம். அங்கு இருந்தவர்கள் எல்லோருமே நல்ல அறிவாளிகள். ஏதோ ஒரு துறையில் புலமை (ஆழ்ந்த அறிவு) பெற்றவர்களாக இருந்தனர். ஒருவர் இலக்கியத் துறையிலே பேரா சிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். அவர் ஆங்கிலேயரானாலும் திருக்குறள், திருவாசகம் ஆகிய நூல்களின் மொழிபெயர்ப்புக்களைப் படித்திருக்கிறார். அந்த நூல்களைப் பாராட்டிப் பேசினார். தமிழிலேயே அவற்றைப் படித்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்று கூறினார்.

கண்ணன்: அப்படியா தாத்தா? நீங்களும் அதுபற்றி இன்னும் விளக்கம் கொடுத்திருப் பீர்களே!

தாத்தா: தாத்தாவைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாய். நல்லது, நானும் எனக்குத் தெரிந்த சிலவற்றைச் சொன்னேன்.

கண்ணன்: மற்றவர்கள் எதைப்பற்றிச் சொன்னார்கள் தாத்தா?

தாத்தா: இன்னுமொருவர் சமயங்களைப்பற்றி ஆய்வு செய்து புத்தகங்கள் எழுதி யுள்ளாராம். இந்துசமயந்தான் மக்களுக்குத் தேவையான எல்லா விஷயங் களையும் உள்ளடக்கியது என்றும் மற்றைச் சமயங்கள் ஒரு பகுதியையே உள்ள டக்கியவை என்றும் ஆனால் எல்லா மதங்களும் மக்களுக்கு நல்லவற்றையே எடுத்துரைக்கிறது என்றும் கூறினார். இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இன்னொருவர்,அவர்பஞ்சாபியர் என்பது அவரின் தோற்றத்திலேயே தெரிந்தது, தங்கள் நாட்டின் செழிப்பைப் பற்றிக்கூறினார். இந்தியாவிலேயே வளமான மாநிலம் பஞ்சாப்தான் என்று அவர் கூறினார். இப்படியே நேரம்

போவது தெரியாமற் பேசிக்கொண்டிருந்தோம். சிறந்த அறிவும் அநுபவமும் மிக்கவர்களுடன் பேசுவதே மிக மகிழ்ச்சியான விஷயம் கண்ணா! இது பற்றி ஔவையாரின் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

கண்ணன்: சொல்லுங்கள் தாத்தா, ஔவையார் பாடல்கள் படிப்பது நல்லது என்று முன்பு சொல்லியிருக்கிறீர்கள் தாத்தா!

தாத்தா: சொல்கிறேன் கேள் கண்ணா!,

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பது வும்நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று

கண்ணன்: கேட்கவே காதுக்கு மிகவும் இனிமையாக இருக்கிறது தாத்தா! நல்லார், நன்றே என்ற சொற்கள் பலமுறை வருகின்றன. கேட்கவும் இனிமையாக இருக்கிறது. இந்தப் பாடலின் கருத்தையும் சொல்லுங்கோ!

தாத்தா: நல்ல குணம் உடையவர்களைச் சந்திப்பது நல்லது. அவர்கள் சொல்லும் நல்ல விஷயங்களைக் கேட்பது நல்லது. அவர்களுடைய நல்ல குணங்களைப்பற்றிப் பிறருக்கு எடுத்துச் சொல்வதும் நல்லது. அதுமட்டுமன்றி, அவர்களுடன் கூடியிருப்பதும் நல்லது. இவையெல்லாம் எமக்கு நன்மை தருவதாய் அமையும்.

கண்ணன்: நல்ல பாடல் தாத்தா. ஔவைப்பாட்டி எங்களுக்கு எவ்வளவோ நல்ல விஷயங்களைச் சொல்லித் தந்துள்ளார். நல்ல நண்பர்கள், உங்களைப்போல நல்ல தாத்தா, நல்ல உறவினர்கள் கிடைப்பது எவ்வளவு சந்தோஷமான விஷயம்!

தாத்தா: ஆமாம் கண்ணா! நல்லவர்களுடன் சேரும்போது நாங்களும் நல்லவர்கள் ஆகிவிடுவோம். நல்ல அறிவு உள்ளவர்களைக் கண்டு அடிக்கடி பேசுவதால் எங்கள் அறிவும் வளர்ந்துவிடும்.

கண்ணன்: ஆமாம் தாத்தா! பாடசாலையில் நல்ல பையன்களுடன் சேரும் பிள்ளைகள் எல்லாம் நல்லவர்களாகவும் படிப்பில் கெட்டிக்காரர்கள் ஆகவும் இருக்கிறார்கள். சில நல்ல கெட்டிக்காரப் பையன்கள் துடுக்குத்தனமான பையன்களுடன் சேர்ந்து கெட்டுப்போகிறார்கள். அவர்களைப் பார்க்கப் பாவமாக இருக்கும் தாத்தா.

தாத்தா: அவர்களின் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோருக்கும் எவ்வளவு துக்கமாக இருக்கும்? யோசித்துப்பார் கண்ணா!

கண்ணன்: அந்தப் பிள்ளைகளை எப்படிக் கெட்டுப்போகாமல் இருக்க பார்க்கலாம் தாத்தா? அவர்கள் சிறுவர்களாக இருக்கும்போதே ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நல்ல நீதி நூல்களைப் படிக்க வைத்தால் நன்றாக இருக்கும். இல்லையா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா! பிள்ளைகளுக்கு நல்ல ஒழுக்கங்களை சிறுவயதிலேயே சொல்லிக் கொடுக்கவேண்டும். இலங்கையில் பாடசாலைகளில் சின்ன வகுப்பில் இருந்தே திருக்குறள், ஆத்திசூடி, நல்வழி, நாலடியார் போன்ற

புத்தகங்களைக் கற்பிக்கிறார்கள்.

கண்ணன்: அப்போ பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே பல நல்ல விஷயங்களைக் கற்றுக் கொள்வார்கள். அதனால் தவறான வழியிலே போகமாட்டார்கள் என்று சொல்லுகிறீர்களா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா. இந்த நாட்டிலும் அப்படியான புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கற்பித்தால் நல்லது. சின்ன வயதில் பிள்ளைகளுக்கு எதுவுமே இலகுவாகப் பதிந்துவிடும். இதற்கு ஒரு பழமொழியும் உண்டு. எங்கே சொல் பார்ப்போம்.

கண்ணன்: ஆமாம் தாத்தா! ‘இளமையிற் கல்வி சிலையில் எழுத்து’ என்று சொல்லித் தந்திருக்கிறீர்கள்.

தாத்தா: கெட்டிக்காரன். மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறாய்!

கண்ணன்: இன்றைக்குச் சந்தித்த நண்பர்களை அடுத்த முறையும் சந்திப்பீர்களோ தாத்தா?

தாத்தா: அவர்களைச் சந்திப்பதில் எனக்குச் சந்தோஷந்தான்.

கண்ணன்: அவர்கள் இந்தப் பூங்காவுக்கு அடிக்கடி வருவார்களா? அல்லது இன்றுதான் முதல்முறை வந்துள்ளார்களோ?

தாத்தா: அவர்கள் தினமும் (ஒவ்வொரு நாளும்) காலையில் நடப்பதற்கு இந்தப் பூங்காவுக்குததான் வருவார்களாம். வெய்யிலாக இருந்தால் கொஞ்சநேரம் பேசிக்கொண்டு இருப்பார்களாம்.

கண்ணன்: வயதானவர்களுக்கு நடப்பதுதான் நல்ல உடற்பயிற்சி என்று நான் தமிழ்ப் புத்தகத்திலே படித்திருக்கிறேன் தாத்தா.

தாத்தா: நடப்பது நல்லததான். அவர்களும் தங்கள் உடல் ஆரோக்கியத்தைப் பேணத்தான் இப்படி வருகிறார்களாம்.

கண்ணன்: நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று ஒரு பழமொழியும் படித்த ஞாபகம் தாத்தா.

தாத்தா: பரவாயில்லையே! நீ தமிழ்ப் பள்ளியில் எல்லா விஷயங்களும் படித்துத் தெரிந்திருக்கிறாய். நோய் வந்தால் உலகத்தில் எதையுமே அநுபவிக்க முடியாமற் போய்விடும். அதனாலேதான் சிறுவரிலிருந்து பெரியவர் வரை உடற்பயிற்சி செய்வது அவசியம் கண்ணா!

கண்ணன்: அப்போ நீங்களும் ஒவ்வொரு நாளும் பூங்காவுக்கு நடந்து போய்வருவது நல்லது தாத்தா.

தாத்தா: கோடை காலத்தில் போகலாம்... ஆனால் குளிர் வந்துவிட்டால் போகவே மனம் வராது கண்ணா.

கண்ணன்: ஞாயிற்றுக்கிழமைகளில் நான் காலையில் எழுந்து உங்களுடன் வருவேன் தாத்தா, தவறாமல் நாங்கள் போகவேண்டும்.

தாத்தா: சரியடா கண்ணா! நீ வருவதானால் நாங்கள் இருவரும் போகலாம்.

கண்ணன்: போவதால் உங்களுக்கு உடற்பயிற்சியுமாச்சு, உங்களுக்குப் பிடித்த நண்பர் களைச் சந்திக்கிறதும் ஆச்சு தாத்தா!

தாத்தா: ஆமாம் கண்ணா, நீ கெட்டிக்காரன் தான், ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுந்ததுபோல இருக்கும்.

கண்ணன்: அதென்ன தாத்தா ஒரு புதுப் பழமொழி சொல்கிறீர்கள்?

தாத்தா: கைக்கு எட்டாத உயரத்தில் மாமரத்தில் மாங்காய் இருக்கும். அதைப் பறிப்பதற்கு ஒரு கல்லை எடுத்து குறிவைத்து எறியும்போது, ஒரு மாங்காய்க்குப் பதிலாக இரண்டு விழுந்தால் எப்படி இருக்கும்? யோசித்துப்பார்!

கண்ணன்: இரட்டிப்பு (இரண்டு மடங்கு) மகிழ்ச்சியாக இருக்கும்.

தாத்தா: இரண்டு காரியங்களை ஒரே முயற்சியில் செய்து முடித்தால் இப்படிச் சொல்வது வழக்கம். பூங்காவுக்கு நடந்துபோவது உடலுக்கு நல்லது. அங்கே நண்பர்களைச் சந்திப்பது உள்ளத்துக்கு நல்லது.

கண்ணன்: இப்போ பழமொழியின் கருத்து எனக்கு நன்றாக விளங்குகிறது தாத்தா.

தாத்தா: அறிவு மிகுந்த நண்பர்களையோ பெரியவர்களையோ சார்ந்திருப்பது நல்லது என்பதற்கு ஒரு திருக்குறளும் இருக்கிறது கண்ணா. உனக்குத் தெரியுமா?

கண்ணன்: இல்லை. அது எந்த அதிகாரத்தில் இருக்கிறது தாத்தா?

தாத்தா: அது ‘பெரியாரைத் துணைக்கோடல்’ என்ற அதிகாரத்தில் இருக்கிறது.

**தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாந் தலை.**

கண்ணன்: கருத்தையும் சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா: திருக்குறளில் உனக்கு ஆர்வம் வந்துவிட்டதைப் பாராட்டுகிறேன் கண்ணா. தம்மிலும் பார்க்க (ஆற்றல், அறிவால்) பெரியவர்களைச் சிறந்த துணையாகக் கொண்டு அவர்வழி நடத்தல் வலிமைகள் எல்லாவற்றுள்ளும் சிறந்த வலிமை என்பது பொருள்.

கண்ணன்: முதற் சொன்ன ஒளவையார் பாடலும் இதுவும் கிட்டத்தட்ட ஒரே கருத்தைச் சொல்கின்றன என்று நினைக்கிறேன் தாத்தா.

தாத்தா: ஆமாம் கண்ணா. நான் சொல்பவை எல்லாம் உனக்கு நன்றாக விளங்கியுள்ளது என்பதை அறிய எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது கண்ணா.

கண்ணன்: இதுவரை எனக்குச் செவிக்கு உணவு கிடைத்தது. இப்போ பசிவந்து வயிற்றுக்கு உணவு தேவைப்படுகிறது.

தாத்தா: எனக்குந்தான் கண்ணா. அதோ வீடு வந்துவிட்டது.

# Hinduism in search of answers...

HINDU SCRIPTURES (contd)
VEDAANGAS

The archaic form of Veda was rather difficult to understand, necessitating further classification. Hence, the six Vedaangas, six subsidiary sciences that help unfold the Vedic wisdom, came into existence. These are the limbs or explanatory notes of Vedhas.

SIKSHA (Phonetics) And
VYAKARNA (Grammar) by Panini;
CHANDA (Metre) by Pingaracharya;
NIRUKTA (Etymology) by Yaksa;
JYOTISHA (Astronomy) by Garga
KALPA (Ritual) by Various



Siksha deals with phonetics, the pronunciation and accent. It explains how each syllable should be pronounced in which context and the psychic effects of those.
Vyakarana is Grammar. Panini's Astadhyayi is the authority on Sanskrit Grammar. It was not written in Sanskrit but Panini used a meta-language called Upadesa to define the grammar of Sanskrit in about 8000 sutras/rules.
Chandas is the science of metres. There are various metres in which the Vedic mantras are composed, such as Gayatri, Anusthup, Trishtup and Jagati. The chandas determine its usage, such as its purpose and context. Since the Veda is an oral tradition, any aberration in the chandas because of error in text or the swara, can be easily identified and corrected.
Nirukta is the science of etymologies. It explains the word-roots and derivation of meanings of words in different contexts.




Jyotisha though a work of astronomy is more directly concerned with the times and periods suitable for the performance of the Vedic sacrifices.
Kalpa is in the form of sutras or aphorisms. It deals with all aspects of sacrificial rites and smaller religious rites performed at home.
In understanding the Vedic literature, Bhashyas or commentaries have played a key role. There has been a galaxy of commentators over the centuries, among whom Saayanaacharya (belonging to 14th century) holds a unique place, not only because of the volume of his work but also because of the quality.

**SMRITHI**


It means scriptures that are begotten from the memories. These are secondary scriptures or LAW codes, based on Veda's teachings. The Smritis stand next in authority to the Vedas and explain and develop Dharma by laying down the laws that govern Hindu national, social, familial and individual obligations. There are 18 main Smrithis. MANU, YAJNAVALKA, and PRASARA are popular smrithis.

**ITHIHASA – (Epics, History)**

ItihAsa means history as it truly happened. The Ramayana of Valmiki and the Mahabharata by Sage Vyasa are popular examples of Itihasa. Dharma is a prominent theme in both epics.The Ramayana and Mahabharata were composed in an epic format, which means as poetry in order to make it easy for people to listen, learn, and preserve history.

**Mahabarata**

Mahabarat comprises about 100,000 verses and is the longest epic poem in the world. It contains a multitude of legends incorporated into unifying narrative about a war between two families for rulership. Mahabharat illustrates the difficulties that arise when Dharma seems contrary to expectations of good and bad conduct.



The epic recounts the events before, during, and after the great battle for kingship fought at Kurukṣetra between the Pāṇḍavas and Kauravas, branches of the Kuru lineage and descendants of Bharata. Also included is elaborate genealogies and much myth and legend (especially in books 1 and 3).

More about Mahabharata will be in future Kalasam issues.

**Ramayana**

Ramayana is about one quarter length of Mahabarata. It concerns the struggle for rule of an earthly kingdom. In Ramayana, Rama places honour and duty above all other considerations, when he insists on adhering to his father's vow to accept 14 years in exile. Sita is a model of wifely dharma.




The hero, Rama, lived his whole life by the rules of dharma; in fact, that was why Indians consider him heroic. When Rama was a young boy, he was the perfect son. Later he was an ideal husband to his faithful wife, Sita, and a responsible ruler of Ayodhya The original Ramayana was a 24,000 couplet-long epic poem attributed to the Sanskrit poet Valmiki. Oral versions of Rama's story circulated for cen-



turies, and the epic was probably first written down sometime around the start of the Common Era. It has since been told, retold, translated and transcreated throughout South and Southeast Asia, and the Ramayana continues to be performed in dance, drama, puppet shows, songs and movies all across Asia.

From childhood most Indians learn the characters and incidents of these epics and they furnish the ideals and wisdom of common life. The epics help to bind together the many peoples of India, transcending caste, distance and language.

Prince Rama was the eldest of four sons and was to become king when his father retired from ruling. His stepmother, however, wanted to see her son Bharata, Rama's younger brother, become king. Remembering that the king had once promised to grant her any two wishes she desired, she demanded that Rama be banished to the forest and Bharata be crowned.



The king had to keep his word to his wife and ordered Rama's banishment. Rama accepted the decree unquestioningly. "I gladly obey father's command," he said to his stepmother. "Why, I would go even if you ordered it."

When Sita, Rama's wife, heard Rama was to be banished, she begged to accompany him to his forest retreat. "As shadow to substance, so wife to husband," she reminded Rama. "Is not the wife's dharma to be at her husband's side? Let me walk ahead of you so that I may smooth the path for your feet," she pleaded. Rama agreed, and Rama, Sita and his brother Lakshmana all went to the forest.



When Bharata learned what his mother had done, he sought Rama in the forest. "The eldest must rule," he reminded Rama. "Please come back and claim your rightful place as king." Rama refused to go against his father's command, so Bharata took his brother's sandals and said, "I shall place these sandals on the throne as symbols of your authority. I shall rule only as regent in your place, and each day I shall put my offerings at the feet of my Lord. When the fourteen years of banishment are over, I shall joyously return the kingdom to you."

Later in the story, Ravana, the King of Lanka, (what



is probably present-day Sri Lanka) abducted Sita. Rama mustered the aid of a monkey army, built a causeway across to Lanka, released Sita and brought her safely back to Ayodhya.

In order to set a good example, however, Rama demanded that Sita prove her purity before he could take her back as his wife. Rama, Sita and Bharata are all examples of persons following their dharma.

This lesson focuses on how the Ramayana teaches Indians to perform their dharma.
Kamba Ramayanam

Ramayana was retold in tamil by the great poet Kambar and his translation has become a Tamil classic on its own right. Kamba Ramayana is not a translation of the Sanskrit epic by Valmiki, but an original retelling of the story of the God Rama. The poetic work is well known for its similes. Kambaramayanam has more than 10,000 verses and 45,000 lines of sweetest phrases and Poems we could ever see in Tamil.

# Hinduism

## Hinduism is a group of six Religions.

**They are:**

1. Saivam - Shiva worship - People who worship Lord Shiva as their foremost god. The sixty three saints (in Periya Puranam) were all Shiva worshippers
2. Shaktham - Shakthi worship - People who worship Goddes Parvathy as their foremost Goddess. Abirami Pattar is a good example.
3. Ganapathiyam - Ganesha worship - People who worship Lord Ganesha (or Pillaiyar) as their foremost God. Poet Avaiyar prayed Lord Ganesha
4. Gowmaram - Murugan worship- People who pray Lord Murugan as their fore most God. St Arunagirinathar was a devotee of Lord Murugan
5. Vaishnavam - Thirumal or Vishnu worship - People who pray Vishnu as their foremost God. All the Azhvars were devotees of Lord Thirumal
6. Souram - Sun worship - People who pray the Sun as their foremost God. Karnan in the Maha Bharath story was a devotee of the Sun.

# திருக்குறள் கற்போம்

## அடக்கமுடைமை 13

## On Self-control

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்**

அடக்கம் ஒருவனை வீரர் குழாத்துள் சேர்க்கும். அடக்கமின்மை பெருந்துன்பதிற்கு ஆளாக்கும்.
Self-control will place (a man) among the Gods; the want of it will drive (him) into thickest darkness (of hell)

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங்கு இல்லை உயிர்க்கு**

ஒருவன் அடக்கத்தைச் செல்வமாக மதித்துக் காப்பானாக மக்களுக்கு அவ்வடக்கத்தினும் மிக்க செல்வம் வேறு இல்லை.
Let self-control be guarded as treasure; there is no greater source of good for man than that.

**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின்**

அறிவினால் அறியப்படுவனவற்றை அறிந்து ஒருவன் நெறிப்படி அடங்கி நடப்பான் ஆயின் அவ்வடக்கம் உயர்ந்தோரால் அறியப்பட்டு மேன்மையைத் தரும்.
If a man, knowing that slef -control is knowledge, in the appointed way controls himself, such self-control, known by the wise, will bring distinction

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

தன் நிலையினின்றும் வேறுபடாது அடங்கி நடப்பவனது உயர்ச்சி மலையினும் மிக உயர்ந்ததாம்.
More lofty than a mountain will be the greatness of that man who, without swerving from his proper state, controls himself.

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து**

செருக்கின்றி அடங்கி நடத்தல் எல்லார்க்கும் ஒப்ப நல்லது என்றாலும், அவ்வெல் லாருள்ளும் செல்வமுடையார்க்கே அது வேறொரு செல்வமாம் சிறப்பினைத் தரும்.
Humility is good in all; but especially in the rich it is (the excellence) of higher

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து**

ஒரு பிறப்பில் ஒருவன் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனாயின், அவனுக்கு ஏழு பிறப்பிலும் பாதுகாப்பு உண்டு.
He who, throughout one birth, like a tortoise, keeps in his five senses, will obtain happiness throughout the seven births.

**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

ஒருவர் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவினைக் காப்பராக. காக்காவிட்டால் சொற்குற்றப்பட்டு வருந்துவர்.
Though you guard nothing else, guard your tongue; as for those who do not guard it, their words will be drawn into evil and they will suffer distress.

**ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்**

ஒரு சொல்லே ஆயினும் பொருளால் பிறர்க்குத் துன்பம் உண்டாகுமாறு ஒருவன் சொல்லுவானாயின், அது நாவடக்கமின்மையைக் காட்டிவிடும்.
Good will be changed into evil if ( a man) speak even one word of evil meaning.

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறு மாறாதே**
**நாவினாற் சுட்ட வடு**

தீயினால் ஒருவனைச் சுட்ட புண் மனத்தில் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுடுமொழியாற் சுட்ட வடு உள்ளத்தில் எப்பொழுதும் ஆறாது. (மாறாதே எனப்பிரித்து வடு மாறாமல் நிலைத்திருக்கும் எனப் பொருள் கொள்வார். ச.சோ. பாரதியார்)
The wound wich has been burnt in by fire may heal, but a wound burnt in by the tongue will never heal.

**கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றி னுழைந்து**

அற நூல்களைக் கற்றுச் சினம் வாராமல் காத்து அடங்கி ஒழுகுபவனைக் காண அறக்கடவுள் வழி நுழைந்து செவ்வியை(நல்லசமயத்தை) எதிர் நோக்கும். (உழைந்து எனப்பிரித்து மணக்குடவர் வருந்தி எனப் பொருள் கொள்வர்)
Virtue seeking for an opportunity will come into the path of that man who guards against anger and has learnt to control himself.

***தமிழ்: முனைவர் இரா சாரங்கபாணி*** ***English: Rev Drew & John Lazarus***

COMMERCIAL & INDUSTRIAL
GUARDING
CALL NOW FOR A FREE SURVEY AND
QUOTATION

SECURITY GUARD
WANTED

* RETAIL
* CONSTRUCTION
* 24 HOUR RADIO PATROLS
* KEY HOLDING
* ACCESS CONTROL
* CCTV

CHARTER SECURITY

A PROFESSIONAL SERVICE EVERY TIME

1ST FLOOR
CAMBRIDGE ROAD
BARKING
ESSEX
1G11 8NR

TEL: 020 8507 7717
FAX: 020 8507 7702



# WESTERN
## JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
**PHONE : 020 8767 3445**

## SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
**PHONE : 020 8672 1900**

# WESTERN
## JEWELLERS & TEXTILES

5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
**PHONE : 020 8903 0909**



**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**



இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8685 9203, 07957 998 522) வடிவமைத்து, அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 08-08-2010 அன்று வெளியிடப்படுகிறது.